SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல், சர்வோ ஆயில் சில்லரை விற்பனை நிலையம்
IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007

# மாலை எக்ஸ்பிரஸ்

MAALAI EXPRESS
மாநிலம் பயனுற!
குரோதி வருடம் மாசி 21
ஹிஜிரி 1446 ரமலான் 4
Email: maalaiexpresspdy@gmail.com
Website: www.maalaiexpress.com
/maalaiexpressnews
● புதுச்சேரி ● புதன்கிழமை, மார்ச் 5, 2025 ● வெளியூர்: 6-2-2025, வியாழக்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 229 ● 8 பக்கம் ● ரூ.6

மல்டிகலர் பைகள்

துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:-
98423 35007

## சென்னையில் அனைத்து கட்சி கூட்டம்

# தொகுதி மறுசீரமைப்பால் தமிழ்நாடு 8 மக்களவை இடங்களை இழக்கும் சூழல்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு

சென்னை, மார்ச் 5-

தொகுதி மறுசீரமைப்பு குறித்து முக்கிய முடிவு எடுப்பதற்காக, தமிழ்நாடு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில், சென்னை தலைமைச்செயலகம் நாமக்கல் கவிஞர் மாளிகையில் 10வது தளத்தில் உள்ள கூட்ட அரங்கத்தில் அனைத்துக்கட்சி கூட்டம் தொடங்கி உள்ளது. இந்த ஆலோசனை கூட்டத்தில், திமுக சார்பில் ஆர்.எஸ். பாரதி,வின்செண்ட் எம்.பி. அதிமுக சார்பில் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார். வக்கீல் இன்பதுரை, மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவர் கமல்ஹாசன். விசிக தலைவர் திருமாவளவன், பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ். தவெக பொதுச்செயலாளர் எஸ்.ஆனந்த், திராவிட கழக தலைவர் வீரமணி சுமார் 53 கட்சிகளை சேர்ந்த தலைவர்கள் கலந்துகொண்டனர். பாஜக, நாம் தமிழர், தமிழ் மாநில காங்கிரஸ் ஆகிய கட்சிகள் பங்கேற்கவில்லை.

இந்நிலையில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பேசிய முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின், "தொகுதி மறுசீரமைப்பால் தமிழ்நாட்டின் பலம் குறைக்கப்படும். தொகுதி மறுசீரமைப்பு எனும் கத்தி தென்னிந்தியாவின் தலைக்குமேல் தொங்கி கொண்டுள்ளது. தொகுதி மறுசீரமைப்பால் தமிழ்நாடு மிகவும் பாதிக்கும். தமிழ்நாடு மிகப்பெரிய உரிமைப் போராட்டத்தை நடத்த வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது.

மத்திய அரசு 2026ம் ஆண்டு மக்களவை தொகுதிகளை மறுசீரமைப்பு செய்ய உள்ளது. மக்கள் தொகை அடிப்படையில்தான் தொகுதி மறுசீரமைப்பு நடைபெறும். மக்கள் தொகையை கட்டுப்படுத்தியதில் தமிழ்நாடு சிறப்பாக செயல்பட்டுள்ளது. மக்கள் தொகை குறைவாக இருப்பதால் தமிழ்நாட்டில் எம்.பி. தொகுதிகள் குறைக்கப்படலாம். தொகுதி மறுசீரமைப்பால் தமிழ்நாடு 8 மக்களவை இடங்களை இழக்கும்.

நாடாளுமன்ற தொகுதிகளை உயர்த்தினால் அதன் எண்ணிக்கை 848 ஆக உயர்த்தப்படக்கூடும். தற்போதைய மக்கள் தொகைப்படி மறுசீரமைப்பு செய்தால் தமிழ்நாட்டிற்கு 22க்கு பதிலாக 10 தான் கிடைக்கும். 1971ம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட தொகுதிகளே தொடர வேண்டும். தொகுதி மறுசீரமைப்பு தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல. ஒட்டுமொத்த இந்தியாவுக்கே அபாயகரமான செயல். தமிழ்நாடு எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சனையில் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும். நாடாளுமன்றத்தில் தற்போதைய உறுப்பினர்களின்



எண்ணிகை உயர்த்தப்பட்டால், தற்போது இரு அவைகளிலும் மாநிலங்களுக்கிடையே எந்த விகிதத்தில் தொகுதிகள் எண்ணிக்கை இருக்கிறதோ, அதே விகிதத்தில் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு தேவையான அரசியல் சட்டத்திருத்தத்தை மேற்கொள்ள வலியுறுத்துகிறோம்.

கட்சி எல்லைகளை கடந்து தமிழக நலனுக்காக அனைத்து தலைவர்களும் இணைந்து எதிர்க்க வேண்டும். மக்கள் தொகையை கட்டுப்படுத்திய தென் மாநிலங்களுக்கு தண்டனைபோல் அமையும். சம நீதியற்ற அநீதியான தொகுதி மறுசீரமைப்பு செய்யப்பட்டால் இந்திய அரசியலமைப்பில் தமிழ்நாட்டில் குரல் ஒடுக்கப்படும். தொகுதி மறுசீரமைப்புக்கு தமிழ்நாடு எதிரானது இல்லை. அதே நேரத்தில் 50 ஆண்டுகளாக சமூக பொருளாதார திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தியதற்கு தண்டனையாக தொகுதி மறுசீரமைப்பு அமைந்துவிடக் கூடாது என்று இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பு கூடாது. தொகுதி மறுசீரமைப்பை 30 ஆண்டுகளுக்கு ஒத்திவைப்பதாக நாடாளுமன்றத்தில் பிரதமர் அறிவிக்க வேண்டும். இந்த கோரிக்கையையும் அது சார்ந்த போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவும் தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களில் இருந்து எம்.பி.க்களைக் கொண்ட கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டு நடவடிக்கைக் குழு அமைக்க இக்கூட்டம் தீர்மானிக்கிறது" என்று அவர் கூறினார்.

இதனைத்தொடர்ந்து மக்கள் தொகை அடிப்படையிலான தொகுதி மறுசீரமைப்புக்கு எதிராக தீர்மானத்தை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்மொழிந்தார்.

இதனைத்தொடர்ந்து தொகுதி மறுசீரமைப்பு தொடர்பான கோரிக்கைகளையும், அவை சார்ந்த போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவும், மக்கள் மத்தியில் இப்பிரச்னைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் தென் மாநிலங்களில் இருந்து எம்.பி.க்களைக் கொண்ட கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய `கூட்டு நடவடிக்கை குழு' ஒன்றை அமைத்திட அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## சாம்பல் புதன் வழிபாடுடன் கிறிஸ்தவர்களின் தவக்காலம் தொடங்கியது



சென்னை, மார்ச் 5-

இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட நிகழ்வை புனித வெள்ளி தினமாக உலகம் முழுவதும் உள்ள கிறிஸ்தவர்கள் கடைபிடிக்கிறார்கள்.அவர் 3வது நாளில் உயிர்தெழுந்த நாளை ஈஸ்டர் பண்டிகையாக கொண்டாடி வருகிறார்கள். அதற்கு முந்தைய 40 நாட்களும், இயேசுவின் சிலுவை பாடுகளை நினைவு கூறும் வகையில் தவக்காலமாக கிறிஸ்தவர்கள் கடைபிடிக்கிறார்கள்.

அந்த வகையில், கிறிஸ்தவர்களின் 40 நாள் தவக்காலம் சாம்பல் புதனுடன் இன்று தொடங்கியது. சாம்பல் புதனை முன்னிட்டு தமிழகத்தில் தலைநகர் சென்னை உள்பட மாநிலம் முழுவதும் பல்வேறு கிறிஸ்தவ தேவாலயங்களில் சிறப்பு திருப்பலி நடைபெற்றது.இதில், ஏராளமானவர்கள் கலந்துகொண்டனர். கிறிஸ்தவர்கள் நெற்றியில் பாதிரியார்கள் சாம்பல் விபூதியிட்டு தவக்காலத்தை தொடங்கிவைத்தனர்.

## வேளாண் நிதிநிலை அறிக்கை: பொதுமக்கள் கருத்துக்களை தெரிவிக்கலாம்

### தமிழ்நாடு அரசு அறிவிப்பு

சென்னை, மார்ச் 5-

2025–2026 ஆண்டிற்கான வேளாண் நிதிநிலை அறிக்கையில் சேர்க்கப்பட வேண்டிய அம்சங்கள் திட்டங்கள் குறித்து tnagribudget2025@gmail.com என்கிற மின்னஞ்சல் மூலமாக பொதுமக்கள் கருத்துகளை தெரிவிக்கலாம் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

மண்ணைப் பொன்னாக மாற்றும் நம் விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்து அவர்களது வாழ்வை மேம்படுத்தும் வகையில் தமிழ்நாடு முதல்அமைச்சர் ஆணைப்படி 2021–2022ம் ஆண்டு முதல் வேளாண்மைக்கென தனி நிதிநிலை அறிக்கை ஆண்டுதோறும் தாக்கல் செய்யப்பட்டு வருகிறது.

எதிர்வரும் 2025–26ம் ஆண்டிற்கான வேளாண்மைத் தனி நிதிநிலை அறிக்கையானது ஐந்தாவது முறையாக வரும் மார்ச்15ம் தேதி சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட உள்ளது. இதன் பொருட்டு, இந்த நிதி நிலை அறிக்கையில் சேர்க்கப்பட வேண்டிய அம்சங்கள் மற்றும் திட்டங்கள் குறித்து பொதுமக்களிடமிருந்து கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.

பொதுமக்கள் தங்களது கருத்துகளை பதிவு செய்ய, பிரத்தியேகமாக உழவர் செயலியில் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது, மேலும் tnagribudget2025@gmail.com என்ற மின்னஞ்சல் மூலமாகவும் வேளாண் நிதிநிலையில் சேர்க்கப்பட வேண்டிய அம்சங்கள் திட்டங்கள் குறித்து பொதுமக்கள் தங்களது கருத்துகளை தெரிவிக்கலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பலூனை விழுங்கிய 7 மாத குழந்தை மூச்சுத்திணறல் ஏற்பட்டு உயிரிழந்த சோகம்



தஞ்சாவூர், மார்ச் 5-


தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு அருகே திருவோணம் தாலுகா ஊரணிபுரம் கிராமத்தை சேர்ந்தவர் சதீஷ்குமார் (35). இவரது மனைவி சிவகாமி (30). இவர்களது 7 மாத ஆண் குழந்தைக்கு நேற்றுமுன்தினம் திடீரென மூச்சு திணறல் ஏற்பட்டது.

உடனடியாக பெற்றோர் குழந்தையை பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு பரிசோதனை செய்த டாக்டர்கள் குழந்தை ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

குழந்தை உடலை சொந்த ஊருக்கு கொண்டு வந்தவர்கள், சந்தேகத்தின் பேரில் தஞ்சை மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு நேற்று கொண்டு சென்றனர். பிரேத பரிசோதனை செய்த போது குழந்தையின் வயிற்றில் பலூன் இருந்தது தெரியவந்தது. அதை அகற்றிய டாக்டர்கள், பலூனை விழுங்கியதால் மூச்சுத் திணறல் ஏற்பட்டு குழந்தை இறந்ததாக தெரிவித்தனர்.

இதுகுறித்து திருவோணம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். குழந்தை பலூனை விழுங்கியதால் மூச்சுத்திணறல் ஏற்பட்டு உயிரிழந்த சம்பவம் அந்த பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

## முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் பங்கேற்ற கூட்டத்தில் நடந்த மோதலால் பரபரப்பு



ஈரோடு, மார்ச் 5-

ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையத்தில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் தலைமையில் 2026 சட்டசபை தேர்தல் செயல்வீரர்கள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. அப்போது அந்தியூர் நிர்வாகிகளுக்கு எந்த கூட்டத்திற்கும் அழைப்பு விடுக்கப்படுவது இல்லை என்று கட்சி நிர்வாகி ஒருவர் புகார் கூறியதாக தெரிகிறது. அப்போது இரு தரப்பினர் இடையே வாக்குவாதம் முற்றியநிலையில், அது கைகலப்பாக மாறியது. இந்நிலையில் அந்த நிர்வாகியை செங்கோட்டையன் ஆதரவாளர்கள் தாக்கி விரட்டியாக கூறப்படுகிறது. இதனிடையே, புகார் கூறியவரை செங்கோட்டையன் மேடைக்கு அழைத்துப் பேசியதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவத்தால் அந்த பகுதியில் பரபரப்பு நிலவி வருகிறது.

# திருப்பூரில் ஜவுளி பூங்கா திறப்பு



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் சாமிநாதன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் காந்தி, மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் ஆகியோர் திருப்பூர் மாநகராட்சி, வீரப்பாண்டி மாமரத்தோட்டம் பகுதியில் சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காவினை திறந்து வைத்து பார்வையிட்டார்கள். உடன் அரசு செயலாளர் அமுதவல்லி, மாவட்ட ஆட்சித்தலைவர் கிறிஸ்துராஜ்.

# என்எஸ் பிரைடு ஹோட்டலில் புரிந்துணர்வு ஒப்பந்தம்



புதுக்கோட்டை மாநகராட்சி, ஏ.என்.எஸ். பிரைடு ஹோட்டலில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில், மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கத்தின்கீழ் நடைபெற்ற வாங்குவோர் விற்பனையாளர் சந்திப்பு நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் அருணா முன்னிலையில் வாங்குவோர் விற்பனையாளர்கள் இடையே இடைதரகரின்றி விற்பனை செய்திட ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

# ஊராட்சி மன்ற தலைவர்கள் ஆலோசனைக்கூட்டம்



வேலூர், கணியம்பாடி, காட்பாடி மற்றும் அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள அனைத்து ஊராட்சி மன்ற தலைவர்களுடனான ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி தலைமையில் ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது.

# நாயுடுமங்கலத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை திறக்க வேண்டும்

## குறைதீர்வு நாள் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தல்

திருவண்ணாமலை, மார்ச் 5–

திருவண்ணாமலையில் நடைபெற்ற வட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் நாயுடுமங்கலத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை உடனடியாக திறந்திட வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தினர்.

திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றிய அலுவலக மன்ற கூட்டரங்கில் வட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம் நேற்று நடந்தது. இந்த கூட்டத்திற்கு துணை ஆட்சியர் (தேர்தல்) கோ.குமரன் தலைமை தாங்கினார். தாசில்தார் கே.துரைராஜ் வட்ட வழங்கல் அலுவலர் மு.தியாகராஜன் சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் பரிமளா துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) கோபு மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் அருள்செல்வம் ஆகியோர் முன்னிலை வகிக்க துரிஞ்சாபுரம் வேளாண்துறை உதவி இயக்குநர் கோபாலகிருஷ்ணன் அனைவரையும் வரவேற்றார். இந்த கூட்டத்தில் அலுவலக மேலாளர் (நிர்வாகம்) கே.எம்.பழனி மற்றும் தென்னிந்திய விவசாயிகள் சங்க மாநில துணை தலைவர் கிருஷ்ணன், தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் கார்கோணம், வி.சந்திரசேகரன், தமிழ்நாடு உழவர் பேரியக்க மாவட்ட செயலாளர் கோ. சிவக்குமார், ஒன்றிய செயலளர் எஸ்.துரை விவசாய சங்க பிரதிநிதி வெள்ளைக்கண்ணு உள்பட விவசாய சங்க பிரதிநிதிகள், அனைத்துறை அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர். கூட்டத்தில் தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் வி.சந்திரசேகரன் பேசுகையில், சமீபத்தில் பெஞ்சல் புயல்மழையால் விவசாய விளைநிலங்களில் பயிரிடப்பட்டிருந்த பயிர்கள் சேதமடைந்தன. சேதமடைந்த பயிர்களுக்கு 4 மாதங்கள் ஆகியும் விவசாயிகளுக்கான உரிய நிவாரணம் வழங்கப்படவில்லை. எனவே உடனடியாக விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். சட்டமன்ற அறிவிப்பின்படி கோவூரில் துணை மின்நிலையம் அமைக்க வேண்டும் நாயுடுமங்கலத்தில் கட்டி முடிக்கப்பட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை உடனடியாக திறந்திட வேண்டும் திருவண்ணாமலை பகுதியில் தனியார் உரவிற்பனை நிலையத்தில் விவசாயிகளுக்கு உரங்கள் விற்பனை செய்வதைவிட கூட்டுறவு கடைகளில் உரங்கள் அதிக விலைக்கு விற்கப்படுகிறது. இதனைத் தடுத்து நிறுத்திட வேண்டும் என்றார்.

இதேபோல விவசாய சங்க பிரதிநிதி வெள்ளைக்கண்ணு பேசுகையில், பொதுப்பணித்துறைக்கு சொந்தமான கமலப்புத்தூர் ஏரியில் உள்ள ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றிட வேண்டும் என்றார். முடிவில் வேளாண் அலுவலர் தாமஸ் நன்றி கூறினார்.

# பொதுமக்களிடம் மனுக்களை பெற்ற ஆட்சியர்



வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக காயிதே மில்லத் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி பொதுமக்களிடம் இருந்து மனுக்களை பெற்று சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார்.

# இலவச வீட்டுமனை பட்டா வழங்கல்



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் ஆகியோர் திருப்பூர் மாவட்டம், குண்டடம் ஊராட்சி ஒன்றியம், ஈஸ்வரசெட்டிபாளையம் சமுதாயக்கூடத்தில் வருவாய் த்துறையின் சார்பில் குண்டடம் ஊராட்சி ஒன்றியம் மற்றும் ருத்ராவதி பேரூராட்சியை சார்ந்த பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கிறிஸ்துராஜ்.

# பேருந்து உரிமையாளர்கள் ஆலோசனைக்கூட்டம்



வேலூர் மாவட்டத்தில் 36 வழித்தடங்களில் இயக்க உத்தேசிக்கப்பட்டுள்ள பேருந்து வழித்தடங்கள் குறித்து பேருந்து உரிமையாளர்களுடனான ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி தலைமையில் ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது. அருகில் வட்டார போக்குவரத்து அலுவலர் சுந்தரராஜன்.

*2026 சட்டமன்ற தேர்தலில்*

# எங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் அரசியல் கட்சி தான் மீண்டும் ஆட்சியில் அமரும்

## வணிகர் சங்க பேரமைப்பின் மாநில தலைவர் பேட்டி

திருவண்ணாமலை, மார்ச் 5–

திருவண்ணாமலையில் நடைபெற்ற பேரமைப்பின் பொதுக்குழு ஆலோசனை கூட்டத்தில் கலந்துகொண்ட தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பின் மாநில தலைவர் ஏ.எம்.விக்ரமராஜா செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில், தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பின் 42வது மாநில மாநாடு மே 5ல் வணிக அதிகார பிரகடன மாநாடாக மருராந்தகத்தில் நடைபெற உள்ளது. அந்த மாநாடு நடைபெறுவது தொடர்பாக மாவட்டம் வாரியாக சுற்று பயணம் மேற்கொண்டு வருகிறேன். திருவண்ணாமலையில் நடைபெற்ற கூட்டத்தில் முதல் தீர்மானமாக 10 ஆயிரம் வணிகர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்போம் என்று தீர்மானிக்கப்பட்டு உள்ளது. இந்த மாநாட்டில் தமிழக முதல் அமைச்சர், மத்திய மந்திரிகள் பங்கேற்க உள்ளார்கள். இந்த மாநாட்டில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்த உள்ளோம். ஆண்டு தோறும் நகராட்சி, உள்ளாட்சி கடைகளில் வாடகை உயர்வு விகிதத்தை ஒரே சீர்படுத்தி முறைப்படுத்திட வேண்டும் என்பதை வலியுறுத்த உள்ளோம். மேலும் மார்கெட், நகராட்சி பகுதியில் புதியதாக கட்டப்படும் கடைகளில் ஏற்கனவே கடை நடத்தி வந்தவர்களுக்கு வழங்க வேண்டும். பிரதமர் நரேந்திர மோடி ஜி.எஸ்.டி. வரியை அமல் படுத்தியபோது ரூ.1 லட்சம் கோடி வரி வசூலித்தால் பல்வேறு வரி சலுகை ஏற்படுத்தப்படும், ஒரே வரியாக வசூலிப்போம் என்று தெரிவித்தார்.

ஆனால் தற்போது ரூ.2 லட்சம் கோடியை தண்டக் கூடிய நிலை இன்றைக்கு வணிக வரித்துறையில் ஏற்பட்டு உள்ளது. எனவே மத்திய அரசு வணிக வரித்துறையில் பல்வேறு வரி குறைப்புகளை ஏற்படுத்த வேண்டும். குறிப்பாக சட்டங்களை எளிதாக்கி வியாபாரிகளுக்கு அபராதம் என்று சொல்வதை தடை செய்ய வேண்டும். அதேபோல் மாநில அரசு குப்பை வரி, தொழில் வரி போன்ற பல்வேறு வரிகளை எங்கள் மீது சுமத்துவதை தவிர்க்க வேண்டும். ஆன்லைன் வர்த்தகத்தில் இருந்தும், கார்ப்பரேட் கம்பெனிகளில் இருந்தும் சாதாரண வணிகர்களை காப்பாற்றுவதற்கு சிறப்பு பாதுகாப்பு சட்டம் ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்த உள்ளோம். வணிகர் சங்க பேரமைப்பின் குடும்பத்தினரிடம் ஒரு வாக்குகள் உள்ளது. வருகிற 2026 ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் எங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுகின்ற அரசியல் கட்சி தான் மீண்டும் ஆட்சி அமரும் என்றார். பேட்டியின்போது சங்க நிர்வாகிகள் ராஜசேகர், மண்ணுலிங்கம் ஆகியோர் உடனிருந்தனர்.

# விவசாயிகள் நில உடமைகளை சரிபார்த்திட பொது சேவை மையத்தில் பதிவு செய்யலாம்

## ஆட்சியர் தர்ப்பகராஜ் அறிவிப்பு

**திருவண்ணாமலை, மார்ச் 5-**

திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகள் தங்கள் நில உடமைகளை சரிபார்த்திட பொது சேவை மையத்தில் இலவசமாக பதிவு செய்யலாம் என திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் க.தர்ப்பகராஜ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது, தமிழகத்தில் மாநில மற்றும் ஒன்றிய அரசின் மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டு வருகிறது. இவற்றை பெற விவசாயிகளுக்கு தனித்துவமான அடையாள எண் வழங்கப்படுகிறது. விவசாய அடையாள எண் மூலம் வேளாண் பயிர்க்கடன், விவசாய இடுபொருட்கள், மழை மற்றும் வறட்சி நிவாரணம் வேளாண் உழவர் நலத்துறை மூலம் செயல்படுத்தப்படும் மானிய உதவி திட்டங்கள் இதர துறைகளின் உழவர் நல திட்டங்கள் ஆகியவற்றைப் பெற முடியும். இனிவரும் காலங்களில் அரசு திட்டங்களில் பங்கு பெற்று பயன்பெற விவசாய அடையாள எண் முக்கியமானதாகும்.

திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகளுக்கு தனி விவசாய அடையாள எண் ஏற்படுத்துவதற்கான முகாம் அந்தந்த கிராமங்களில் வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் சமூகவளநபர்கள் மற்றும் இல்லம் தேடிக் கல்வி தன்னார்வலர்கள் மூலம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் தற்போது அனைத்து பொது சேவை மையங்களிலும் இலவசமாக பதிவேற்றம் செய்து கொடுப்பதால், விவசாயிகள் பொது சேவை மையங்களை அணுகி தங்களின் விவரங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்துகொள்ளலாம். இதற்கு கட்டணம் ஏதும் இல்லை என திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் 2,54,907 மாவட்டத்தில் 2,54,907 விவசாயிகள் இருக்கும் நிலையில், இதுவரை 1,28,401 விவசாயிகள் மட்டுமே பதிவேற்றம் செய்துள்ளனர். மீதமுள்ள விவசாயிகள் 31.03.2025க்குள் கீழ்கண்ட ஆவணங்களைக் கொண்டு பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. பொது சேவை மையத்தில் இலவசமாக பதிவு செய்ய தேவையான ஆவணங்கள் ஆதார் அட்டை, நிலபட்டா மற்றும் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட கைபேசி ஆகியவற்றை பதிவு செய்ய கொண்டுசெல்வது அவசியம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஆட்சியர் ஆய்வு



**கன்னியாகுமரி, மார்ச் 5-**

கன்னியாகுமரி மாவட்ட பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறையின் கீழ் செயல்பட்டு வரும் குருந்தன்கோடு, வெள்ளிசந்தை, நடுவூர்கரை உள்ளிட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் குளச்சல் நகர்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில், கன்னியாகுமரி மாவட்டம் குருந்தன்கோடு, வெள்ளிசந்தை, நடுவூர்கரை உள்ளிட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் குளச்சல் நகர்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளிட்டவைகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, நோயாளி களுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறியப்பட்டது. மேலும் நோயாளிகளின் வருகை பதிவேடு, அலுவலக பதிவேடுகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மருத்துவ மனையின் உள்நோயாளிகளுக்கு விரிக்கப்பட்ட படுக்கை விரிப்புகளை தினமும் மாற்றும் வேண்டும் எனவும், வார்டுகளின் தரை மற்றும் சுவர்பகுதியில் கறைகள் இல்லாதவாறு தினமும் சுத்தம் செய்ய வேண்டும் எனவும் துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் மருத்துவ மனைக்கு வரும் நோயாளிகளிடம் அக்கறையுடனும், பரிவுடனும் நடந்து கொண்டு சிகிச்சை அளிக்குமாறு மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

தொடர்ந்து மருத்துவமனையில் இருப்பு வைக்கப்பட்டுள்ள மருந்து பொருட்கள் குறித்து செவிலியர்கள் மற்றும் மருத்துவர்களிடம் கேட்டறியப்பட்டது.

மேலும் வாரம்தோறும் செவ்வாய்கிழமைகளில் கர்ப்பிணி பெண்களுக்கென்ற பிரத்தியேக நாள் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. கர்ப்பிணி தாய்மார்களுக்கு வழங்கப்படும் சிகிச்சையை முறைகள் குறித்தும், மேலும் அங்கு பதிவு செய்யப்பட்டுள்ள கர்ப்பிணி பெண்களின் எண்ணிக்கை, கர்ப்பிணி பெண்களுக்கு செய்யப்பட்ட ஸ்கேன் சேவைகள், ஆய்வக பரிசோதனைகள், கர்ப்பிணி பெண்கள் மற்றும் பிரசவித்த தாய்மார்களுக்கு வழங்கப்படும் உணவுகள் குறித்தும், ரத்த சோகை வராமல் தடுப்பதற்கு இரும்புச்சத்து மாத்திரைகள் வழங்கப்படுகிறா என்பது குறித்தும் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களிடம் கேட்டறியப் பட்டது. இவ்வாறு தெரிவித்தார்கள்.

# மக்களுடன் முதல்வர் 3ம் கட்ட சிறப்பு முகாமில் ரூ.1.51 கோடியில் நலத்திட்ட உதவி வழங்கல்



**நாமக்கல், மார்ச் 5-**

நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் சட்டமன்ற தொகுதி, எலச்சிபாளையம் ஊராட்சி ஒன்றியம், இலுப்புலி ஊராட்சி, திருச்செங்கோடு சட்டமன்ற தொகுதி, சித்தாளந்தூர், ஏமப்பள்ளி ஊராட்சிகள் மற்றும் குமாரபாளையம் சட்டமன்ற தொகுதி, பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியம் ஓடப்பள்ளி அக்ரஹாரம் மற்றும் காடச்சநல்லூர் உள்ளிட்ட ஊராட்சிகளில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மதிவேந்தன் மக்களுடன் முதல்வர் மூன்றாம் கட்ட சிறப்பு முகாம்களில் நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் உமா தலைமையில், நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் மாதேஸ்வரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மூர்த்தி ஆகியோர் முன்னிலையில் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு, 219 பயனாளிகளுக்கு ரூ.1.51 கோடி மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இம்முகாமில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சர், துணை முதலமைச்சர் ஆகியோர் அரசின் திட்டங்கள் அனைத்தும் கடைக்கோடியில் உள்ள ஏழை, எளிய மக்களுக்கு சென்றடைய வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் பல்வேறு சிறப்பு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள். பொதுமக்கள் தங்களுக்கு தேவையாக கோரிக்கைகளை பெற அரசு அலுவலகங்களுக்கு செல்வதற்கான போக்குவரத்து செலவு, கால விரையம், அலுவலர்களுக்கு காத்திருக்க வேண்டிய நிலை ஆகியவற்றை தவிர்த்து பொதுமக்களுக்கு பயன்பெறும் வகையில் அரசை தேடி மக்கள் சென்ற நிலையை மாற்றி மக்களைத் தேடி அரசு இயந்திரம் செல்ல வேண்டும் என்பதன் அடிப்படையில் “மக்களுடன் முதல்வர்” திட்டத்தை செயல்படுத்தினார்கள்.

நாமக்கல் மாவட்டத்தில் கடந்த 28.2.2025 வரை 20 ஊராட்சிகளில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் மூன்றாம் கட்ட சிறப்பு முகாம்களில் சுமார் 12,500 கோரிக்கை மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இக்கோரிக்கை மனுக்கள் மீது தனிகவனம் செலுத்தி தீர்வு வழங்கப்பட உள்ளது. தற்போது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்கள் அதிக அளவில் வசிக்கும் கிராம ஊராட்சிகளில் “மக்களுடன் முதல்வர்” முகாம் 3ம் கட்டமாக நடத்த உத்தரவிடப்பட்டு, நாமக்கல் மாவட்டத்தில் 60 முகாம்கள் நடத்தப்பட உள்ளது. இந்த முகாம்களில் பெறப்படும் மனுக்கள் மீது ஒரு மாத காலத்தில் தீர்வு காணப்பட வேண்டும் என்ற நோக்கில் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு இன்றைய தினம் எலச்சிபாளையம் ஊரட்சி ஒன்றியம், இலுப்புலி ஊராட்சி, திருச்செங்கோடு ஊராட்சி ஒன்றியம், சித்தாளந்தூர் ஊராட்சி, ஏமப்பள்ளி ஊராட்சி, பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியம், காடச்சநல்லூர் ஊராட்சி மற்றும் ஓடப்பள்ளி அக்ரஹாரம் ஊராட்சிகளில் பொதுமக்கள் அதிகளவில் அணுகும் வருவாய்துறை, ஊரக வளர்ச்சித்துறை, சமூக நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, வேளாண்மைத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை உள்ளிட்ட 15 அரசு துறைகள் சார்ந்த 44 வகையான சேவைகள் வழங்கும் வகையில் சிறப்பு முகாம்கள் பொதுமக்களின் இருப்பிடத்திற்கு அருகிலேயே நடத்தப்படுகிறது. இம்முகாம்களில் மின் இணைப்பு பெயர் மாற்றம், வீட்டுமனை பட்டா, பட்டா மாறுதல், பட்டா உட்பிரிவு மாறுதல், கடனுதவி, பல்வேறு சான்றிதழ்கள், உதவித்தொகை, சாலை வசதி, குடிநீர் வசதி உள்ளிட்ட அனைத்து கோரிக்கை மனுக்கள் மீதும் தீர்வு வழங்கப்பட உள்ளது. அரசுத்துறை அலுவலர்கள் தங்கள் மனுக்களுட இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள் குறித்து எடுத்துரைப்பார்கள். பொதுமக்கள் மனுக்கள் அளிக்கும் பட்சத்தில் மனுக்கள் மீது உடனடியாக தீர்வு வழங்கப்பட உள்ளது.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் மகளிருக்கு பேருந்துகளில் கட்டணமில்லா இலவச விடியல் பயணம், மகளிர் உரிமை தொகை மாதம் ரூ.1,000 வழங்கும் திட்டம், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடன் தள்ளுபடி. மகளிர் சுய தொழில் தொடங்கிட கடனுதவி, பெண்கள் உயர்கல்வி பயில்வதை ஊக்குவித்திட மாதம் ரூ.1,000 வழங்கும் புதுமைப் பெண் திட்டம், மாணவர்களுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் தமிழ்ப்புதல்வன் திட்டம், ஏழை, எளிய குழந்தைகளின் பசியினை போக்கிட பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம், பொதுமக்களின் நலன் காக்க மக்களைத் தேடி மருத்துவம், கொரோனா காலத்தில் மாணவர்களின் கல்வியை பாதுகாக்க இல்லம் தேடி கல்வி உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி உள்ளார்கள். இத்தகைய சிறப்பான திட்டங்கள் மூலம் ஒவ்வொரும் குடும்பத்தாரும் மாதந்தோறும் ரூ.2,000 வரை சேமிக்க முடிகிறது. இத்தகைய சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி நம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய மக்களின் நலன் காத்து வருகின்றார்கள்.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சிப்பொறுப்பேற்ற பிறகு நாமக்கல் மாவட்டத்தில் கடந்த 2021 முதல் 2025 வரை கலைஞர் கனவு இல்லம், ஊரக வீடுகள் பழுது பராமரிப்பு திட்டம், பிரதான் மந்திரி கிராம குடியிருப்பு திட்டம், சாலை பணிகள், குடிநீர் திட்ட பணிகள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், சிறுபாலம் அமைத்தல், சுகாதார பணிகள், தடுப்பணை, விளையாட்டு மைதானம் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் கீழ் எலச்சிபாளையம் ஊராட்சி ஒன்றியம், இலுப்புலி ஊராட்சியில் ரூ.8.58 கோடி மதிப்பீட்டில் 279 திட்டப்பணிகள், திருச்செங்கோடு ஊராட்சி ஒன்றியம், ஏமப்பள்ளி ஊராட்சியில் ரூ.3.24 கோடி மதிப்பீட்டில் 79 திட்டப்பணிகள், சித்தாளந்தூரில் ரூ.4.94 கோடி மதிப்பீட்டில் 112 திட்டப்பணிகள், பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியம், காடச்சநல்லூரில் ரூ.3.46 கோடி மதிப்பீட்டில் 191 திட்டப்பணிகள், ஓடப்பள்ளி அக்ரஹாரம் ஊராட்சியில் ரூ.2.15 கோடி மதிப்பீட்டில் 169 திட்டப்பணிகள், நிறைவேற்றப்பட்டுள்ளன. எனவே, அரசின் திட்டங்களை பொதுமக்கள் பயன்படுத்தி கொண்டு தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றி கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

தொடர்ந்து, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் வருவாய்த்துறை, கூட்டுறவுத்துறை, வேளாண்மை துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, மகளிர் திட்டம் மற்றும் தாட்கோ உள்ளிட்ட அரசுத்துறைகள் சார்பில் எலச்சிபாளையம் ஊரட்சி ஒன்றியம், இலுப்புலி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் 31 பயனாளிகளுக்கு ரூ.20.05 லட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகள், திருச்செங்கோடு ஊராட்சி ஒன்றியம், சித்தாளந்தூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் 21பயனாளிகளுக்கு ரூ.17.56 லட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகள், ஏமப்பள்ளி ஊராட்சி, மண்கரட்டுப்பாளையம் சேவை மையத்தில் 65 பயனாளிகளுக்கு ரூ.11.95 லட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகள், பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியம், காடச்சநல்லூர் ஊராட்சி, ஐந்துபனையில் 60 பயனாளிகளுக்கு ரூ.60 லட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகள், ஓடப்பள்ளி அக்ரஹாரம் ஊராட்சி, ஓடப்பள்ளி புனித ஆண்ட்ரூஸ் ஆர்சி துவக்கப்பள்ளியில் 42 பயனாளிகளுக்கு ரூ.41.55 லட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகள் என மொத்தம் 219 பயனாளிகளுக்கு ரூ.1.51 கோடி மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இம்முகாம்களில் அட்மா குழுத்தலைவர்கள் தங்கவேல் (எலச்சிபாளையம்), யுவராஜ் (பள்ளிபாளையம்), மாவட்ட வருவாய் அலுவலர் மருத்துவர் சுமன், திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை வடிவேல், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) பிரபாகரன், திருச்செங்கோடு வருவாய் கோட்டாட்சியர் சே.சுகந்தி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) ரவிச்சந்திரன், மாவட்ட மேலாளர் தாட்கோ ராமசாமி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் முருகன், முகாம் பொறுப்பு அலுவலர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கெங்கவல்லி ஊராட்சி ஒன்றிய பகுதியில் வளர்ச்சி திட்டப்பணிகளை ஆட்சியர் ஆய்வு



**சேலம், மார்ச் 5-**

சேலம் மாவட்டம், கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் பிருந்தா தேவி செய்தியாளர் பயணத்தின்போது நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்விற்குப்பின், மாவட்ட ஆட்சித்தலைவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது: பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளுக்கு முக்கியத்துவம் அளித்து தமிழ்நாடு அரசு பல்வேறு வளர்ச்சித்திட்டப்பணிகளை செயல்படுத்தி வருகிறது. இத்தகைய திட்டங்கள் தரமாகவும், உரிய கால அளவில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவருவதை உறுதி செய்திடும் வகையில் தொடர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, கோடைக்காலம் தொடங்கியுள்ள நிலையில் பொதுமக்களின் குடிநீர் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளித்து அலுவலர்கள் பணியாற்றிட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. சீரான குடிநீர் வழங்கப்பட்டு வருவது அரசு அலுவலர்கள் தொடர்ந்து கண்காணித்து குடிநீர் தேவையை கருத்திற்கொண்டு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. எதிர்பாராதவிதமாக குடிநீர் குழாய் பழுதடைந்தால் அதனை உடனடியாக சரிசெய்து, சீரான குடிநீர் வழங்குவதை அலுவலர்கள் உறுதி செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் சீரான குடிநீர் வழங்கப்பட்டு வருவது குறித்து பொதுமக்களிடம் கேட்டறிந்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

சேலம் மாவட்டம், கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியத்தில் கடந்த 3 ஆண்டுகளில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித் திட்டம், பள்ளிகள் உட்கட்டமைப்புத் திட்டம். அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், கலைஞர் கனவு இல்லம், அயோத்திதாச பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத்திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மூலம் ரூ.146.88 கோடி மதிப்பீட்டிலான 4,162 திட்டப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 2,570 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 1,592 பணிகள் நடைபெற்று வருகின்றன.

அந்தவகையில், இன்றையதினம் கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியம், 74 கிருஷ்ணபுரம் மற்றும் உலிபுரம் ஊராட்சிகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் வலசகல்பட்டி மற்றும் உலிபுரத்தில் ரூ.26.23 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுவரும் நியாய விலைக் கடை கட்டடத்தினையும், கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் கிருஷ்ணாபுரம், கூடமலை, மூலப்புதூர், நாகியம்பட்டி, இந்திராநகர் ஆகிய ஊராட்சிகளில் தலா ரூ.3.50 லட்சம் மதிப்பீட்டில் வீடுகள் கட்டும் பணி நடைபெற்று வருவதையும் நேரில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அதேபோன்று, கிராமப்புற வீடுகள் பழுதுபார்க்கும் திட்டத்தின் கீழ் கிருஷ்ணாபுரம், கூடமலை, மூலப்புதூர், புதுகாலனி, மேட்டுத்தெரு ஆகிய ஊராட்சிகளில் வீடுகள் புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், மூலப்புதூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் ரூ.17.30 லட்சம் மதிப்பீட்டில் கணினி அறை மற்றும் ரூ.35.30 லட்சம் மதிப்பீட்டில் இரண்டு புதிய வகுப்பறைக் கட்டடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருவதையும் நேரில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் கூடமலை ஊராட்சியில் ரூ.40 லட்சம் மதிப்பீட்டில் 1,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப் பட்டுள்ளதையும், நபார்டு திட்டத்தின் கீழ் உலிபுரம் ஊராட்சியில் ரூ.18.42 லட்சம் மதிப்பீட்டில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப் பட்டுள்ளதையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இதனைத்தொடர்ந்து, கூடமலையில் ரூ.22 லட்சம் மதிப் பீட்டில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள நூலகம் மற்றும் 15வது நிதிக்குழு மானியத்திட்டத்தின் கீழ் கொண்டையம்பள்ளியில் ரூ.39.68 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய துணை சுகாதார நிலையம் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அதேபோன்று, அயோத்திதாச பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நாகியம்பட்டியில் ரூ.30 லட்சம் மதிப்பீட்டில் கட்டப் பட்டுவரும் சமுதாயக்கூடம் கட்டுமானப் பணிகள் என மொத்தம் கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் ரூ.2.67 கோடி மதிப்பீட்டில் தற்போது நடைபெற்றுவரும் 27 திட்டப் பணிகள் ஆய்வு மேற்கொள்ளப் பட்டது. முன்னதாக, கெங்கவல்லி வட்டத் திற்குட்பட்ட 74 கிருஷ்ணா புரம் கிராமத்தில் 92 ஏக்கர் பரப்பளவிலும், உலிபுரம் கிராமத்தில் 30 ஏக்கர் பரப்பளவிலும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் சார்பில் சூரியசக்தி மின்கலம் (சோலார் பேனல்) அமைப்பதற்கான நில மாறுதல் செய்வது தொடர்பாக நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப் பட்டது. அதேபோன்று கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பொதுமக்களின் கோரிக்கைகள் குறித்து கேட்டறியப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்றுவரும் அனைத்து வளர்ச்சித் திட்டப் பணிகளையும் தரமாகவும், உரிய கால அளவிலும் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர தொடர்புடைய அலுவலர்களுக்கு இந்த ஆய்வின்போது அறிவுறுத்தப் பட்டுள்ளது. இவ்வாறு தெரிவித்தார்.

# பணி நிறைவு பாராட்டு விழா



**மதுரை, மார்ச் 5-**

மதுரை மாவட்டத்தில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் கீழ் உள்ள செய்தி நிலையத்தில் 30 ஆண்டுகளாக நூலகராக பணியாற்றிய கல்யாணசுந்தரம் பணி ஓய்வு பெற்றதை அடுத்து அலுவலகப் பணியாளர்கள், உறவினர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.

தஞ்சாவூரை சேர்ந்த கல்யாணசுந்தரம் கடந்த 1995ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கீழ் உள்ள செய்தி நிலையத்தில் நூலகராக பணியில் சேர்ந்தார். புத்தகங்கள் மீதும் தமிழ் இலக்கியங்கள் மீதும் தீராத பற்று கொண்ட அவர், தொடர்ந்து 30 ஆண்டுகளாக இந்த செய்தி நிலையத்தில் நூலாகராக சிறப்புடன் பணியாற்றினார்.

இந்நிலையில் கடந்த 26.02.2025 அன்று கல்யாணசுந்தரம் விருப்ப ஓய்வு பெற்று பணியை நிறைவு செய்தார்.

அன்னாருக்கு செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கூடுதல் இயக்குனர் (ஓய்வு) சிவ.சு. சரவணன், மதுரை மண்டல இணை இயக்குனர் பாஸ்கரன், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் சாலி தளபதி, உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) கயிலைச் செல்வம் உட்பட செய்தி நிலையம் மற்றும் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலக பணியாளர்கள் அனைவரும் வாழ்த்து தெரிவித்தனர். அதேபோல அவரது பணி ஓய்வு விழாவில் ஏராளமான உறவினர்கள், நண்பர்கள் பங்கேற்று அவரது சேவையை பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர்.

# பர்கூர் ஊராட்சி ஒன்றியத்தில் வளர்ச்சி திட்ட பணிகளை ஆட்சியர் ஆய்வு



**கிருஷ்ணகிரி, மார்ச் 5-**

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் ஊராட்சி ஒன்றியம், ஓரப்பம், மல்லப்பாடி, கொண்டப்பநாயனப்பள்ளி, ஜெகதேவி ஆகிய ஊராட்சிகளில் வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத்துறை சார்பாக ரூ.2 லட்சத்து 4 ஆயிரத்து 600 மதிப்பிலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பாக ரூ.2 கோடியே 96 லட்சத்து 54 ஆயிரம் மதிப்பில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மாவட்ட ஆட்சித்தலைவர், பர்கூர் வட்டாரம், ஓரப்பம் கிராமத்தில் வேளாண்மைத்துறையின் மூலம் ஒருங்கிணைந்த பண்ணைய திட்டத்தின் கீழ், விவசாயிகள் சுப்பிரமணி, கமலநாதன், இராஜேந்திரன், வாசு ஆகியோர்களுடைய விவசாய நிலத்தில் ஒருங்கிணைந்த பண்ணைய திட்டத்தின் கீழ், கறவை மாட்டிற்கு மானியம், ரூ.20,000, தேனீபெட்டிக்கு மானியம் ரூ.1600, மண்புழு உர படுக்கைக்கு மானியம் ரூ.6000, ராகி பயிர் சாகுபடிக்கு விதைகள் மற்றும் இடுப்பொருட்களுக்கு மானியம் ரூ.2000 பெற்று கறவை மாடு, தேனீபெட்டி, மண்புழு உர படுக்கை, பழமரக்கன்று மற்றும் இராகி பயிர் சாகுபடி செய்துள்ள வயல்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்து விவசாயிகளிடம் கேட்டறிந்தார்.

மேலும், வேளாண் அடுக்கு திட்டத்தின் கீழ் மின்னணு முறையில் விவசாயிகளின் தரவுகள் சேகரிக்கப்பட்டு, விவசாயிகளுக்கு தனித்துவ அடையாள எண் வழங்கும் முகாமை ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, தோட்டக்கலைத்துறை மூலம் விவசாயி வாசுக்கு ரூ.1,75,000 மானியத்தில் வழங்கப்பட்ட நிழல் வலை கூடத்தை ஆய்வு மேற்கொண்டு, ஒருங்கிணைந்த பண்ணைய திட்டம் மூலம் வழங்கப்பட்ட கறவை மாடு, தேனீபெட்டி, பழமரக்கன்று மற்றும் மண்புழு உர படுக்கை பார்வையிட்டார். மேலும், நெல் விதை பண்ணை வயலை ஆய்வு மேற்கொண்டு, விதைபண்ணை பதிவு, விதைப்பண்ணை நடைமுறைகள், விதைசுத்திகரிப்பு மற்றும் விதைகொள்முதல் குறித்தும், நெல் விதைப்பண்ணை அமைக்கும் விவசாயிகளுக்கு கொள்முதல் மற்றும் உற்பத்தி மானியமாக 1 கிலோவிற்கு ரூ.43 அரசின் மூலம் விலை நிர்ணயம் செய்து விதைப்பண்ணை விவசாயிகளுக்கு வழங்கப்படுவதை கேட்டறிந்தார். விவசாயிகளிடம் மூலம் நெல் கொள்முதல் செய்யப்பட்டு சுத்திகரிப்பு நிலையத்திற்கு சென்று சுத்தம் செய்யப்பட்டு, விதை பரிசோதனை நிலையத்திற்கு விதை மாதிரிகளை அனுப்பி பிறகு தரமான விதைகள் சான்று செய்யப்பட்டு வேளாண்மை விரிவாக்க மையம் மற்றும் துணை வேளாண்மை விரிவாக்க மைய கிடங்கிற்கு அனுப்பப்பட்டு பிறகு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுவதை ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் விவசாயிகளுக்கு இடுபொருட்கள் மற்றும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு குறித்த காலாண்டர் வழங்கினார்.

தொடர்ந்து, ஊரக வளர்ச்சித்துறை சார்பாக, ஓரப்பம் ஊராட்சியில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ், ரூ.30 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் கிராம ஊராட்சி மன்ற அலுவலக கட்டுமான பணிகளையும், மருதேப்பள்ளி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க நியாய விலைக் கடையில் அரசி, பருப்பு, சமையல் எண்ணெய் உள்ளிட்ட பொருட்களின் இருப்புகள், குடும்ப அட்டைகளின் விவரங்கள் குறித்து கேட்டறிந்தார். மேலும், மல்லப்பாடி ஊராட்சியில், மல்லப்பாடி முதல் மரிமானப்பள்ளி வரை செல்லும் சாலையின் குறுக்கே நபார்டு திட்டத்தின் கீழ், ரூ.2 கோடியே 38 லட்சத்து 66 ஆயிரம் மதிப்பில் புதியதாக கட்டப்பட்டுள்ள உயர்மட்ட மேம்பாலம் கட்டுமான பணிகளையும்,

கொண்டப்பநாயனப்பள்ளி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி வளாகத்தில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ், ரூ.16 லட்சத்து 45 ஆயிரம் மதிப்பில் புதியதாக கட்டப்பட்டு வரும் அங்கன்வாடி மைய கட்டிடம் மற்றும் ரூ.4 லட்சத்து 43 ஆயிரம் மதிப்பில் புதியதாக கட்டப்பட்டு வரும் பள்ளி சுற்றுசுவர் கட்டுமான பணிகளையும், அங்கன்வாடி மையம் மற்றும் ஊராட்சி ஒன்றிய

துவக்கப்பள்ளியில் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட மதிய உணவுகளை ஆய்வு மேற்கொண்டார்.

ஜெகதேவி ஊராட்சியில், கலைஞரின் கனவு இல்ல திட்டத்தின் கீழ், தலா ரூ.3 லட்சத்து 50 ஆயிரம் வீதம் பயனாளிகள் முனியம்மாள், முருகன் ஆகியோர்களின் வீடுகள் கட்டுமான பணிகளை பார்வையிட்டு, கட்டுமான பணிகளுக்கு பயன்படுத்தப்படும் சிமெண்ட், ஜல்லி, செங்கல் உள்ளிட்ட தளவாடப் பொருட்களை தரமானதாக பயன்படுத்த வேண்டும் என அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வுகளின்போது, வேளாண்மைத்துறை இணை இயக்குநர் பச்சையப்பன், தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் இந்திரா, துணை இயக்குநர் (வேளாண்மை) காளிமுத்து, பர்கூர் வட்டார வேளாண் உதவி இயக்குநர் சிவசங்கரி, வட்டார வளர்ச்சி அலுவலர் செந்தில், ஊரக வளர்ச்சித்துறை உதவி செயற் பொறியாளர் ஜெகதீஸ் குமார், உதவி பொறியாளர்கள் முருகேசன், பூம்பாவை, பணி மேற்பார்வையாளர்கள் தேன்மொழி, அரவிந்த், மகாராஜன் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

# அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ஆட்சியர் ஆய்வு





**ஈரோடு, மார்ச் 5-**

ஈரோடு மாவட்டம், அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் பொன்மஞ்சள் குறுங்குழுமம், நேரடி கொள்முதல் நிலையம், மிளகாய் நேரடி கொள்முதல் நிலையம் மற்றும் நொய்யல் கயிறு குழுமம் ஆகியவற்றில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா ஆய்வு மேற்கொண்டார்.

ஈரோடு மாவட்டம் கொடுமுடி, மொடக்குறிச்சி, ஈரோடு மற்றும் கோபிசெட்டிபாளையம் பகுதிகளில் உள்ள மஞ்சள் உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில் "தமிழ்நாடு முதலமைச்சர்" அறிவிப்பின்படி " ஈரோடு பொன்மஞ்சள் பதப்படுத்தும் தொழிற்சாலை" ரூ.748.10 லட்சம் மதிப்பீட்டில் அமையவுள்ளது. 20 உறுப்பினர்களைக் கொண்ட சிறப்பு செயலாக்க ஊர்தி அமைக்கப்பட்டு செயல்முறைப்படுத்தப்படவுள்ளது. திட்ட முதலீட்டில் ரூ.688.12 லட்சம் அரசு மானியமாகவும் ரூ.79.98 சிறப்பு செயலாக்க ஊர்தியின் பங்களிப்பாகவும் அமையப்பெறுகிறது. "பொன் மஞ்சள் குறுங்குழும பொது வசதி மையத்தில்" மஞ்சள் அறுவடைக்குப்பின் நடைபெறும் அனைத்து பதப்படுத்தும் பணிகளான, தூய்மைப்படுத்துதல், தோல் நீக்குதல், துண்டு செய்தல், உலர்த்துதல், பொடியாக்குதல் மற்றும் தரம் பிரித்தல் உள்ளிட்ட அனைத்து பணிகளுக்கும் பயனுள்ளதாக அமையும். இதனால் ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து மஞ்சள் உற்பத்தியாளர்கள் மற்றும் பதப்படுத்தும் குறு, சிறு தொழில் நிறுவனங்கள் பயன்பெறும். அதனைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் மொடக்குறிச்சி வட்டம், அவல்பூந்துறை வேளாண்மை விற்பனைத் துறை அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டு வரும் "மஞ்சள் பதப்படுத்தும்" குறுங்குழும தொழிற்சாலை பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, ஈரோடு விற்பனைக் குழு கீழ் செயல்பாட்டில் உள்ள அவல்பூந்துறை விற்பனைக்கூடம் 4 கிட்டங்கி மற்றும் 9 ஏலக்கொட்டகை ஆகியவற்றுடன் 16 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. அதில் 2024-2025 நிதி ஆண்டில் வரத்து இனத்தில் 7794 மெட்ரிக் டன், வருவாய் இனத்தில் 75 கோடி வர்த்தகம் செய்து 75.36 லட்சம் சாதனை எய்தப்பட்டது. பொருளீட்டுக்கடன் 9 விவசாயிகளுக்கு 33.25 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. நான்கு கிட்டங்களில் 5030 மெ.டன் அளவுள்ள கிட்டங்கிகளில் 3197 மெ.டன் அளவுள்ள விளைபொருள்கள் இருப்பு வைக்கப்பட்டது, கீஞ்ஸிகி பதிவு செய்யப்பட்ட கிடங்குகளில் மீழிகீஸி ரசீது மூலம் 174 மெ.டன் கொள்ளளவு 142.68 லட்சம் மூலம் வங்கி கடன் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர், மஞ்சள் அரவை இயந்திரம் ஒப்பந்த அடிப்படையில் மிளகாய் மற்றும் மஞ்சள் தரம் பிரித்து பேக் செய்து ஏற்றுமதி செய்யப்படுவது குறித்தும், அவல்பூந்துறையில் தமிழ்நாடு நுகர்பொருள் கழகம் மூலம் செயல்படும் நேரடி நெல் கொள்முதல் மூலம் 205 விவசாயிகளிடம் 1247 மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப் பட்டதையும் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

கொடுமுடி வட்டம், கொங்குடையாம்பாளையம் கிராமத்தில் 7.07 ஏக்கர் பரப்பளவில் நொய்யல் கயிறு குழுமம் செயல்பட்டு வருகிறது. இக்குழுமம் தமிழ்நாடு அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறையின் கீழ் செயல்படும் மாவட்ட தொழில் மையம் மூலமாக கயிறு குழுமம் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கயிறு சார்ந்த மதிப்புக்கூட்டு பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் தொடங்கப்பட்டுள்ளது. மேலும் நொய்யல் கயிறு குழுமமானது அரசு பங்காக ரூ.7.34 கோடியும், உறுப்பினர் பங்காக ரூ.2.95 கோடியும் என மொத்தம் ரூ.10.29 கோடி திட்ட மதிப்பீடாக கொண்டுள்ளது. இதில் 43 உறுப்பினர்கள் உள்ளனர். நொய்யல் கயிறு குழுமத்தின் மூலம் தென்னை நார் சார்ந்த மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களான தென்னை நார் கயிறு, தென்னை நார் கயிறு தரை விரிப்பு, கயிறு மிதியடி போன்றவை தயாரிக்கப்பட்டு வருகிறது. மேலும் ஈரோடு மாவட்டத்தில் உள்ள தென்னை நார் சார்ந்த மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தாயரிக்கும் 150க்கும் மேற்பட்ட குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கு முக்கிய ஆதாரமாக உள்ளது.

அதனைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நொய்யல் கயிறு குழுமத்தில் ஆய்வு மேற்கொண்டு, செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார்.

இந்த ஆய்வுகளின்போது, பொது மேலாளர் (மாவட்ட தொழில் மையம்) திருமுருகன், வேளாண்மை துணை இயக்குநர். செயலாளர், ஈரோடு விற்பனைக்குழு சாவித்திரி உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொது நிறுவனங்கள் குழுவினர் கடலூரில் ஆய்வு

**கடலூர், மார்ச் 5-**

கடலூர் மாவட்டம், நெய்வேலி அனல்மின் நிலையம், வீராணம் ஏரி. சிப்காட். செல்லாங்குப்பம் பெட்ரோல் பங்க், கடலூர் வட்ட செயல்முறை கிடங்கு, செம்மண்டலம் ஆதிதிராவிடர் நல மாணவியர் தங்கும் விடுதி போன்ற இடங்களில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொது நிறுவனங்கள் குழு (2024-2025) தலைவர் நந்தகுமார் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், சட்டப்பேரவை செயலாளர் முனைவர் கி.சீனிவாசன் ஆகியோர் முன்னிலையில் குழு உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் கிரி (செங்கம்), சிந்தனை செல்வன் (காட்டுமன்னார் கோயில்) ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.



மேலும், கடலூர் பாராளுமன்ற உறுப்பினர் விஷ்ணுபிரசாத், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் ஐயப்பன், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா ராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆய்விபோது, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொது நிறுவனங்கள் குழு தலைவர் நந்தகுமார் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சர் அறிவுறுத்தலிற்கிணங்க கடலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொது நிறுவனங்கள் குழு இன்றைய தினம் பல்வேறு இடங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

நெய்வேலி அனல்மின் நிலையத்தில் நிலக்கரி சுரங்கம் 1 மற்றும் 1கி இல் வனவியல் பிரிவில் காடு வளர்த்தலுடன் நெல், தேங்காய், வாழை, மா, சப்போட்டா, கொய்யா, காய்கறிகள், தேக்கு போன்றவை பயிரிடுதல், பூங்காவில் மான் வளர்த்தல், மரம் நடுதல், படகு சவாரி ஏரி மற்றும் இயற்கை பூஞ்சோலை பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. மேலும், நிலக்கரி எடுக்கும் சுரங்கும். சேகரிக்கும் இடம். வருங்காலங்களில் மேற்கொள்ளப்பட உள்ள பணிகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. நெய்வேலியில் செயல்பட்டுவரும் துணை சுகாதார நிலையத்தில் பொதுமக்களின் வருகை பதிவேடு, மருத்துவர்களின் பணியிடங்கள். பராமரிக்கப்படும் கோப்புகள் மற்றும் செயல்பாடுகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் உள்ளூர் பொதுமக்களிடம் வேண்டிய தேவைகள் குறித்து கேட்டறியப்பட்டது.

கடலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள வீராணம் ஏரியானது முக்கிய குடிநீர் ஆதாரமாக உள்ளது. நீர்ப்பிடிப்பு பகுதிகளிலிருந்து பெய்யும் மழைநீர் மற்றும் காவிரி ஆற்றில் வெளியேற்றப்படும் உபரி நீர் கொள்ளிடம், கீழணை மற்றும் வடவாறு கால்வாய் வழியாக இந்த ஏரியை வந்து அடைகின்றது. வீராணம் ஏரியிலிருந்து சென்னைக் குடிநீர் வழங்கல் திட்டத்தின் கீழ் சென்னை நகருக்கு நாள் ஒன்றுக்கு 190 மில்லியன் லிட்டர் தண்ணீரை எடுக்க அனுமதி அளித்துள்ளது. வடக்குத்து நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து சுமார் 180 எம்.எல்.டி சுத்திகரிக்கப்பட்ட நீர், சென்னை நகர குடிநீர் தேவைக்காக 1875 மி.மீ விட்டம் கொண்ட குழாய் வழியாக அனுப்படுகிறது. மேலும், வீராணம் ஏரியினை ஆழப்படுத்தி அதிகப்படியான தண்ணீர் தேங்க வழிவகை செய்ய திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது. கூடுதலான தண்ணீர் தேக்குவதற்கு ஆழப்படுத்துவதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ளன.

சிப்காட் தொழில்துறை வளாகம் கட்டம் 11 இல் அமைந்துள்ள கெம்பிளாஸ்ட் சன்மார் லிமிடெட் நிறுவனமானது 2024ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இந்த அலகு வருடத்திற்கு 41000 டன் பேஸ்ட் பிவிசி ரெசின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளது. இந்த அலகுகளில் உற்பத்தி செய்யப்படும் கழிவுநீரை சுத்திகரிக்க கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ளது. மேலும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் தோட்டக்கலைக்கு நிலத்தில் பயன்படுத்தப்படுகிறது. சுத்திகரிக்கப்பட்ட வர்த்தக கழிவுநீர் செயலாக்கத்திற்கு மறுசுழற்சி செய்யப்படுகிறது.

ஒருங்கிணைந்த கழிவுநீர் சுத்திகரிப்பிலிருந்து வேதியியல் கசடு ஆண்டுக்கு 234 டன் ஆகும். இது தமிழ்நாடு கழிவு மேலாண்மை நிறுவனத்தின் மூலம் வெளியேற்றப்படுகிறது. இத்தொழிற்சாலையானது அளவுருகள் ஆகியவற்றிற்கான சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரின் தரத்தை கண்காணிக்கப்பட்டு வருகிறது. காற்று மாசு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்தொழிற்சாலையானது வென்ட் கேஸ் அனலைசரில் க்ஷிளிசி மற்றும் உலர்த்தியில் ஷிறிவி -க்ஷிளிசி ஐ கண்காணிக்க இணையதள கண்காணிப்பு அமைப்பை நிறுவி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய தலைமை அலுவலகத்தில் உள்ள பராமரிப்பு மையங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது.

செல்லாங்குப்பம் பகுதியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் துறை (மாவட்ட தொழில் மையம்) சார்பில் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ரூ.15.75 லட்சம் மானியத்தில் கட்டப்பட்டுள்ள பெட்ரோல் பங்கின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப் பட்டது.

கடலூர் வட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ் செயல்படும் கடலூர் வட்ட செயல்முறை கிடங்கு செயல்பட்டு வருகிறது. இங்கு உணவு தானியங்கள் சேமித்து வைக்கப்பட்டு, கூட்டுறவுத்துறையின் கீழ் செயல்படும் 201 நியாயவிலை கடைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன. மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் காலை உணவு திட்டம், அரசு நலவிடுதிகள், தொண்டு நிறுவனங்கள், காவல்துறை மற்றும் சிறைத்துறை ஆகிய துறைகளுக்கு அரசு நிர்ணயித்த மானிய விலையில் தமிழக அரசின் ஒதுக்கீட்டின்படி உணவு பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. மாதாந்திர பொதுவிநியோக திட்ட பொருட்கள் அரிசி, சர்க்கரை, கோதுமை, துவரம்பருப்பு, பாமாயில் போன்றவை வழங்கப்படுகிறது.

செம்மண்டலம் பகுதியில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் சார்பில் ரூ.511.42 லட்சம் மதிப்பீட்டில் 1621.22 ச.மீ பரப்பளவில் தரை தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்துடன் கூடிய 100 கல்லூரி மாணவியர் தங்கும் விடுதி கட்டப்பட்டு வருகிறது என தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொது நிறுவனங்கள் குழுத் தலைவர் தெரிவித்தார்.

ஆய்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் ராஜசேகரன், மாவட்ட வருவாய் அலுவலர் (நிலஎடுப்பு) சிவருத்ரய்யா, கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் இளஞ்செல்வி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் சங்கர், மாவட்ட மாசு கட்டுப்பாடு வாரிய கோட்டப் பொறியாளர் கெஜலட்சுமி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# மேல்மலையனூர் அங்காளம்மன் கோயிலில் மாசி தேர் திருவிழா



விழுப்புரம், மார்ச் 5-

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் அருள்மிகு அங்காளம்மன் கோயிலில் மாசி பெருவிழாவை முன்னிட்டு நடைபெற்ற தேரோட்டத்தில் லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு சாமிதரிசனம் செய்தனர்.

விழுப்புரம் மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற தளமாக உள்ள அருள்மிகு அங்காளம்மன் கோயிலில் ஆண்டு தோறும் மாசி பெருவிழா நடைபெற்று வருவது வழக்கம். இந்நிலையில் மாசி பெருவிழா கடந்த 26ம் தேதி மகா சிவராத்திரி அன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது. இதில் மயானக்கொள்ளை, தீமிதி, திருத்தேர் வடம் பிடித்தல் ஆகியவை முக்கிய திருவிழாவாகும் இந்நாட்களில் லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்வது வழக்கம்.

7ம் நாள் திருவிழாவான திருத்தேர் வடம் பிடித்தல் மாலை நடைபெற்றது. விழாவை முன்னிட்டு இன்று அதி காலை மூலவர் அங்காளம் மனுக்கு பால், தயிர், தேன், பன்னீர், இளநீர், சந்தனம் உள்ளிட்ட பல்வேறு வாசனை திரவியங்களை கொண்டு அபிஷேகம் நடைபெற்று, பல்வேறு மலர்களை கொண்டு அலங்காரம் செய்விக்கப்பெற்று, தங்க கவசம் அணிவிக்கப்பட்டு மகா தீபாரதனை நடைபெற்றது. இதனை தொடர்ந்து உற்சவர் அங்காளம் மனுக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் பல்வேறு மலர்களை கொண்டு அலங்காரம் செய்விக்கப்பெற்று, சரியாக பகல் 3 மணிக்கு அம்மன் அலங்கரிக்கப்பட்ட புதிய தேரில் அமர்ந்து பக்தர்களுக்கு காட்சி அளித்தார். பின்னர் அம்மனுக்கு மகா தீபாராதனை நடைபெற்றது. தொடர்ந்து தேர் சக்கரத்திற்கு சிறப்பு பூஜைகள் செய்துதொடர்ந்து 4.30 மணிக்கு தேர் வடம் பிடிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது

இதில் ஆரணி எம்.பி.தரணிவேந்தன், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான், விக்கிரவாண்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, மைலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சிவக்குமார், மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரஹ்மான், இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் பழனி, உள்ளிட்ட அதிகாரிகள் அறங்காவலர்கள் கலந்துகொண்டு தேரை வடம் பிடித்து இழுத்தனர்.

பக்தர்கள் அங்காளம்மா என பக்தி கரகோஷத்துடன் தேரினை வடம் பிடித்து இழுத்து வேண்டுதலை நிறைவேற்றினர். பக்தர்கள் தங்கள் விளை நிலங்களில் விளைந்த காய்கறிகள் தானிய வகைகள் நாணயங்கள் ஆகியவற்றை தேரின் மீது வீசி தங்களது நேர்த்திக்கடனை செலுத்தினர்.

இதில் திண்டிவனம் சார் ஆட்சியர் திவ்யான்ஷு நிகம், ஒன்றிய பெருந்தலைவர்கள் மேல்மலையனூர் கண்மணி நெடுஞ்செழியன், செஞ்சி விஜயகுமார், விழுப்புரம், கடலூர்,திருவண்ணாமலை, வேலூர், சென்னை, சேலம், தர்மபுரி மற்றும் கர்நாடகா, கேரளா, புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் இருந்து லட்சக்கணக்காண பக்தர்கள் கலந்துகொண்டு தேரை வடம் பிடித்து இழுத்து சாமி தரிசனம் செய்தனர்.

வடக்கு மண்டல ஐஜி அஸ்ரா கார்க் தலைமையில் விழுப்புரம் டிஐஜி திஷா மித்தல், விழுப்பும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சரவணன் உள்ளிட்ட 1000க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

விழாவிற்கான ஏற்பாடுகளை இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் மேல்மலையனூர் ஜீவானந்தம், கோவில் அறங்காவல் குழு தலைவர் மதியழகன், அறங்காவலர்கள் சுரேஷ், ஏழுமலை, பச்சையப்பன், சரவணன், வடிவேல், சந்தானம் மற்றும் மேலாளர் மணி உள்ளிட்ட கோவில் பணியாளர்கள் செய்தனர்.

## லட்சக்கணக்கான பக்தர்கள் சாமி தரிசனம்



## ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி



திருவெண்ணெய் நல்லூர், மார்ச் 5-

திருவெண்ணெய் நல்லூர் அருகே உளுந்தூர்பேட்டை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட இருவேல்பட்டு மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் தமிழக முதல்வர் ஸ்டாலின் 72வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு இரத்ததானம் முகாம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவிற்கு திமுக கிழக்கு ஒன்றிய செயலாளரும், மாவட்ட கவுன்சிலருமான மா.சந்திரசேகரன் தலைமை தாங்கினார். உளுந்தூர்பேட்டை எம்.எல்.ஏ., அ.ஜெ. மணிக்கண்ணன் முன்னிலை வகித்தார். வட்டார மருத்துவ அலுவலர் காயத்ரி அனைவரையும் வரவேற்றார். விழாவில் திமுக நிர்வாகி காரப்பட்டு ஆடிட்டர் இராஜீவ்காந்தி ஏற்பாட்டில் கள்ளக்குறிச்சி மாவட்ட செயலாளர் சங்கராபுரம் எம்.எல்.ஏ., உதயசூரியன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு கர்ப்பிணி பெண்களுக்கு நிழற்குடை, உயர் ரக ஊட்டச்சத்து உணவு பெட்டகம், மற்றும் மரக்கன்று வழங்கி சிறப்புரையாற்றினார். தொடர்ந்து ரத்ததான முகாமை துவக்கி வைத்த அவர், பின்னர் மருத்துவமனை வளாகத்தில் மரக்கன்று நட்டு வைத்து பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கி சிறப்பித்தார். இதில் திமுக கிழக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட மாவட்ட, ஒன்றிய, கிளை கழக, சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

## லக்னோ கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தில் வேளாண் அமைச்சர் நேரில் ஆய்வு



புதுச்சேரி, மார்ச் 5-

புதுச்சேரி வேளாண் அமைச்சர் தேனீ. ஜெயக்குமார், லக்னோவில் உள்ள இந்திய கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தை பார்வையிட்டு அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

கரும்பு வகைகளில் வளர்ச்சி, நீர் மற்றும் மண்வளம் சார்ந்த கரும்பு வகைகள், கரும்பு பயிரை தாக்கும் சிவப்பு அழுகல் எதிர்ப்பு சக்தி மேம்படுத்தும் அம்சங்கள் குறித்து கேட்டறிந்தார்.

கரும்பு நடவு, களையெடுத்தல், அறுவடை மற்றும் வெல்லம் உற்பத்தி இயந்திரங்களை பார்வையிட்டார்.

கரும்பு பயிர் பாதிக்கும் மேல் துளைப்பான் நோய் எதிர்ப்பு, உப்பு நீர் செறிந்த மண் வகைகளில் வளரக்கூடிய வீரிய இனப்பெருக்க விதைகள், வெல்லம் தயாரித்தல், பதப்படுத்துதல், கையாளுதல் மற்றும் சேமித்தல் குறித்து அதிகாரிகள் விளக்கம் அளித்தனர். இந்திய கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் வேளாண் விஞ்ஞானிகள், சேர்மன், இயக்குநர் மற்றும் உயரதிகாரிகள் உடன் இருந்தனர்.

## பூரணாங்குப்பம் அங்காளம்மன் கோயில் திருவிழாவில் சபாநாயகர் தரிசனம்



பூரணாங்குப்பம் அங்காளம்மன் ஆலய மாசி மாத திருவிழாவின் ஏழாம் நாள் நிகழ்ச்சியில் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், சட்டப்பேரவை தலைவருமான செல்வம் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தார். உபயதாரர்கள் மற்றும் விழாக்குழுவினர் சட்டப்பேரவைத் தலைவருக்கு சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

# மேல்வாலை கிராமத்தில் 6ம் ஆண்டு மயானக்கொள்ள உற்சவ திருவிழா

விழுப்புரம், மார்ச் 5-

விழுப்புரம் மாவட்டம் கண்டாச்சிபுரம் வட்டம் மேல்வாலை கிராமத்தில் எழுந்தருளியுள்ள ஶ்ரீ மகா காளியின் ஆலய 6ம் ஆண்டு மயானக்கொள்ளை உற்சவ திருவிழாவில் பக்தர்கள் தங்களது வேண்டுதலுக்கு இனங்க அம்மன் குறத்தி வேடமிட்டு விதியுலா வலம் வந்து தங்களது வேண்டுதல்களை மகா காளிக்கு சமர்ப்பணம் செய்தனர்.

அடுத்ததாக, பதிவிளக்கு பூஜைக்காக வேண்டுதலுடன் களிமண்ணை பக்குவமாய் பதியவிட்டு அதில் தெய்வங்களின் பம்பாய் காளி மற்றும் மகா காளியின் உருவம் பதித்து பதிவிளக்கு பூஜை எனும் சிறப்பு பூஜை வெகு வியரிசையாக நடைபெற்றது. அதனைத்தொடர்ந்து, அம்மனுக்கு பிறந்த வீட்டார் பூ, பொட்டு, சேலை, வளையல் உள்ளிட்ட அம்மனுக்கு உகந்த சீர்வரிசைப் பொருட்களை தாய் வீட்டு சீராக அம்மனுக்கு பக்குவமாய் படையலிட்டு ஆராதணையோடு பூஜை செய்தனர்.



ஶ்ரீ மகா காளிக்கு வேண்டுதல்களுடன் அபிஷேக, ஆராதனைகள் மிக சிறப்பாக நடைபெற்றது. இறுதியாக, வான்நோக்கி வீசும் பொருட்களை மடியேந்தி பெற்றுக்கொண்டால் குழந்தையின்மை இதுபோன்ற தங்களது கஷ்டங்கள் அனைத்தும் பறந்து ஓடும் என்ற ஐதீகத்தின்படி, அம்மனுக்கு உகந்த பொருட்களுடன் ஊர் ஒன்று கூடி வான்நோக்கி சூரையிட்டும், அவ்வாறாக சூரையிட்ட பொருட்களை அந்த காளியே நமக்கு மேலிருந்து தருவதாக என்னி மடியேத்தி பெற்றுக்கொண்டு அம்மனி அருள் பெற்றுச் சென்றனர்.

அதனைத் தொடர்ந்து விழுப்புரம் மாவட்டம் வீரத்தாய் உடுக்கை பம்பை, சிலம்பு, கலை நலச்சங்கத் தலைவர் பூவர்ணமுத்து கலைநிகழ்வும் பொதுமக்கள் மற்றும் பக்தர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டு உற்சாகத்தோடு கண்டுகளித்தனர்.

மேல்வாலை கிராமத்தில் வீற்றிருக்கும் எங்களது மகா காளியானவள் மக்களை ஒரு குடைக்குள் வேண்டி செல்வங்களை அள்ளிக் கொடுத்து தன் பிள்ளைகள்போல காத்து வரும் ஶ்ரீ மயான காளியம்மன் 6ம் ஆண்டு மயானக் கொள்ளை உற்சவ திருவிழாவானது ஒரே இடத்தில் 6 தெய்வங்களான ஶ்ரீ மகாகாளியம்மன், ஶ்ரீ வனகாளியம்மன், ஶ்ரீ அக்னி வீரன், ஶ்ரீ ஆத்திலியம்மன், ஶ்ரீ சப்த கன்னிகள், ஶ்ரீ முனீஸ்வரன் ஆகிய ஆறு தெய்வங்களும் ஒரே இடத்தில் காட்சி தந்து மக்களுக்கு வேண்டிய செல்வங்களை கொடுத்து அவர்களது உயிர், உடமைகளை பாதுகாத்து வரும் அதிசயமான கோவில் வீற்றிருக்கும் ஶ்ரீ மகா காளியின் அருளை பக்தகோடிகள் அனைவரும் பயபக்தியோடும், வேண்டுதல் மனப்பான்மையோடு கலந்துகொண்டு அம்மன் அருள் வேண்டி பெற்றால் சகல செல்வங்களும், சௌபாக்கியங்களும் தங்கள் இல்லம் தேடி வரும் என ஶ்ரீ மகா காளி பக்தர்கள் அம்மன் புகழ் பாடி வருகிறார்கள்.

இறுதியாக அம்மன் அருள் பெற வேண்டி வருகை புரிந்த கிராம மற்றும் சுற்று வட்டார பக்தர்களுக்கு விழா கமிட்டியின் சார்பாக அறுசுவை அன்னதானமும் வயிறார வழங்கப்பட்டது. ஶ்ரீ மகா காளியின் மாயானக் கொள்ளை உற்சவ திருவிழாவில் ஏராளமான பக்தர்கள் பக்தியோடு கலந்துகொண்டு அம்மன் அருள் பெற்று சென்றனர்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளில் ரத்ததான முகாம்



விழுப்புரம், மார்ச் 5-

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி ரத்ததான முகாம் விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்த முகாமை வனம் மற்றும் கதர் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் க. பொன்முடி தொடங்கி வைத்தார். இதைத் தொடர்ந்து ஹிந்தி திணிப்புக்கு எதிரான உறுதிமொழியை அமைச்சர் பொன்முடி வாசிக்க, அதை அனைவரும் திரும்பக் கூறி ஏற்றுக்கொண்டனர்.

முகாமுக்கு மத்திய மாவட்ட திமுக பொறுப்பாளரும், விழுப்புரம் எம்.எல்.ஏ.வுமான இரா.லட்சுமணன் தலைமை வகித்து, 720 நபர்களுடன் ரத்ததானம் வழங்கினார். விழுப்புரம் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் ரத்த வங்கிக் குழுவினர், முகாமில் ரத்ததானம் செய்தவர்களிடமிருந்து கொடையாக ரத்தத்தை பெற்றுச் சென்றனர். விழாவில் முன்னாள் எம்.எல்.ஏ.செ.புஷ்பராஜ், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் கே.பஞ்சநாதன், டி.என்.ஜெ. சம்பத், மாவட்ட திமுக துணைச் செயலர் தயா. இளந்திரையன், ஒன்றியச் செயலர்கள் பி.தெய்வசிகாமணி, தே.முருகவேல், க.மும்மூர்த்தி, வி.ஜி.பிரபாகரன், வே.கணேசன், விழுப்புரம் நகரச் செயலர் இரா. சக்கரை, வளவனூர் பேரூர் கழகச் செயலர் பா.ஜீவா, நகர்மன்ற உறுப்பினர்கள் ஆர்.மணவாளன், மணி, சாந்தராஜ், நகர இளைஞரணி அமைப்பாளர் செ.மணிகண்டன், கோலியனூர் ஒன்றியக்குழுத் தலைவர் இ.சச்சிதானந்தம், தலைமைக் கழக வழக்குரைஞர் சுவை.சுரேஷ் உள்ளிட்ட திமுகவினர் பங்கேற்றனர்.

விழுப்புரம் நகராட்சியின் 14 வார்டுகள், வளவனூர் பேரூராட்சி, கோலியனூர் கிழக்கு, மேற்கு, தெற்கு, கண்டமங்கலம் மேற்கு, கிழக்கு, மத்திய, காணை, கிளியனூர், வானூர் கிழக்கு, மேற்கு ஒன்றியங்கள், கோட்டக்குப்பம் நகராட்சியின் 5 வார்டுகள் என மத்திய மாவட்ட திமுக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மார்ச் 6 முதல் 31ஆம் தேதி வரை வெவ்வேறு நாள்களில் 51,840 பயனாளிகளுக்கு பல்வேறு நல உதவிகள் வழங்கப்படும் என்று மத்திய மாவட்ட திமுக பொறுப்பாளரும், எம்.எல்.ஏ.வுமான இரா. லட்சுமணன் தெரிவித்தார்.

## தமிழ்நாடு அரசின் சாதனைகள் புகைப்பட கண்காட்சி



ஈரோடு மாவட்டம், டிஎன் பாளையம் ஊராட்சி ஒன்றியம், அக்கரை கொடிவேரி ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த புகைப்பட கண்காட்சியினை பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டனர்.

## முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கம் திறப்பு



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சென்னை, அண்ணா சாலை, காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரியில் நடைபெற்ற அரசு விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பில் தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம் சட்டமன்ற தொகுதி பேட்மாநகரில் கட்டப்பட்டுள்ள "முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கத்தை" காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்ததை தொடர்ந்து தூத்துக்குடி மாவட்டத்தில் மீன்வளம்மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத் தலைமையில் திருவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர் ஊர்வசி அமிர்தராஜ், ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் சண்முகையா ஆகியோர் முன்னிலையில் குத்துவிளக்கேற்றி கல்வெட்டினை திறந்து வைத்தார்.

## கயத்தாறு மாரியம்மன் கோவிலில் கொடை விழா



கயத்தாறு, மார்ச் 5-

கயத்தாறு மாரியம்மன் கோவிலில் கொடை விழா கடந்த எட்டு நாட்களுக்கு முன்பு கொடியேற்றத்துடன் தொடங்கியது. அன்று முதல் தினமும் காலை மாலை சிறப்பு பூஜைகளுடன் கும்மி பாட்டு, முளைப்பாரி பாடல்கள், நடைபெற்றன. எட்டாம் நாளன்று அதிகாலையில் ஹோமங்கள் யாகங்கள் அனைத்து அபிசேங்கள் நடைபெற்றன. இதனை தொடர்ந்து கோவில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்டோர் முளைப்பாரி, அக்னி சட்டி, பால்குடம், பல்வேறு நேர்த்திக்கடன்களை பக்தர்கள் முக்கிய ரத வீதி வழியாக மேலதாளத்துடன் ஊர்வலமாக வந்தனர். மத்தியான கொடை இரவு வில்லிசை மற்றும் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. இங்கு வருகை புரிந்த அனைவரையும் மதியம் மற்றும் இரவு 5000 பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து சாமக்கொடை பொங்கலிட்டனர். கிடாய் வெட்டி அம்பால் வீதிவலம் வந்தனர்.

## சுற்றுச்சூழல் விழிப்புணர்வுக்கான மஞ்சப்பை விருதுக்கு விண்ணப்பிக்கலாம்

### மாவட்ட ஆட்சியர் தகவல்

திருவண்ணாமலை, மார்ச் 5-

மஞ்சப்பை விருதுக்கு தகுதியுள்ள கல்வி நிறுவனங்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் விண்ணப்பிக்க வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் தர்ப்பகராஜ் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறிருப்பதாவது: சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வுக்காக மஞ்சப்பை விருதுகளை தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது. பிளாஸ்டிக் தடையை முறையாக செயல்படுத்துவதுடன், பிளாஸ்டிக் பைகளுக்கு மாற்றாக மஞ்சப்பை போன்ற பாரம்பரிய சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுகளை ஊக்கப்படுத்துவோருக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

அதன்படி சிறந்த 3 பள்ளிகள், 3 கல்லூரிகள் மற்றும் 3 வணிக நிறுவனங்களுக்கு இந்த விருது வழங்கப்படும். ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக்குகளுக்கு மாற்றாகப் சுற்றுச் சுழலுக்கு உகந்த மாற்றுப் பொருட்கள் பயன்படுத்துவதை தங்கள் வளாகங்களில் ஊக்கப்படுத்திய பள்ளிகள், கல்லூரிகள், வணிக நிறுவனங்கள் மஞ்சப்பை விருதுக்கு விண்ணப்பிக்கலாம். அதற்கான விண்ணப்பங்களை கலெக்டர் அலுவலக இணையதளம் மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை வரும் மே 1ம் தேதிக்குள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அளிக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## அங்காள பரமேஸ்வரி அம்மன் கோயில் தேரோட்டம்



கீழ்பென்னாத்தூர் ஆஞ்சநேயர் குளக்கரை மேட்டில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற புற்று உருவில் அருள் பாலித்து வரும் அங்காள பரமேஸ்வரி அம்மன் கோயிலில் நேற்று நடந்த தேரோட்ட விழாவில் பக்தர்கள் வெள்ளத்தில் தேர் பவனி வந்தது. உள்படம்: மலர் அலங்காரத்தில் அங்காள பரமேஸ்வரி அம்மன்.

## அனைத்துத்துறை அலுவலர்கள் ஆய்வுக்கூட்டம்




கடலூர், மார்ச் 5-

கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொது நிறுவனங்கள் குழு (2024-2025) தலைவர் நந்தகுமார் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், சட்டப்பேரவை செயலாளர் முனைவர் சீனிவாசன் மற்றும் குழு உறுப்பினர்கள் அன்பழகன் (கும்பகோணம்), கிரி (செங்கம்), துரை சந்திரசேகரன் (பொன்னேரி). சிந்தனைசெல்வன் (காட்டுமன்னார்கோயில்) சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் முன்னிலையில் அனைத்துத்துறை அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கடலூர் பாராளுமன்ற உறுப்பினர் விஷ்ணுபிரசாத், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் ஐயப்பன், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா ராஜேந்திரன், விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினர் ராதாகிருஷ்ணன் உடனிருந்தனர். ஆகியோர்

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு நுகர்வோர் வாணிபக்கழகம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், தமிழ்நாடு மீன்வள மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் போன்ற துறைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டுவரும் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் செயல்படுத்தப்பட்டுவரும் பல்வேறு திட்டங்களின் முன்னேற்றம் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடன் விரிவான ஆய்வு மேற்கொண்டனர்.

மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மூலம் முதலமைச்சர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சென்டரிங் ஷீட், மொபைல் மற்றும் கம்ப்யூட்டர் சேல்ஸ் சர்வீஸ். போட்டோ ஸ்டுடியோ, சூப்பர் மார்க்கெட், தையலகம் அமைப்பதற்கான என மொத்தம் 5 பயனாளிகளுக்கு ரூ.9,21,724 மதிப்பீட்டிலான மானியத் தொகையினை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொது நிறுவனங்கள் குழு தலைவர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கடலூர் மாநகர மேயர் சுந்தரிராஜா, துணை மேயர் தாமரைச்செல்வன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் ராஜசேகரன், மாநகராட்சி ஆணையாளர் அனு, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திட்ட இயக்குநர் சரண்யா, சிதம்பரம் சார் ஆட்சியர் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்து துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

# கொடுமுடி பேரூராட்சி பகுதிகளில் வளர்ச்சி திட்டப்பணிகளை ஆட்சியர் ஆய்வு



ஈரோடு, மார்ச் 5-

ஈரோடு மாவட்டம், கொடுமுடி ஊராட்சி ஒன்றியம் மற்றும் கொடுமுடி பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர், வடுகபட்டி பேரூராட்சி ஜெயராமபுரத்தில் ரூ.4.90 கோடி மதிப்பீட்டில் மாவீரன் பொல்லான் அவர்களுக்கு திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கத்திற்கு அடித்தளம் அமைக்கும் பணி நடைபெற்று வருவதை நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தொடர்ந்து, சிவகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் ஆய்வு மேற்கொண்டு, மாணவர்களின் வருகை குறித்து கேட்டறிந்து, பராமரிக்கப்படும் பதிவேடுகளை பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து, அஞ்சூர் ஊராட்சியில் அனைவருக்கும் வீடுகட்டும் திட்டத்தின் கீழ் தலா ரூ.2.40 லட்சம் வீதம் ரூ.7.20 லட்சம் மதிப்பீட்டில் 3 வீடுகள் கட்டப்பட்டு வருவதை பார்வையிட்டு, பயனாளிகளிடம் கலந்துரையாடினார். மேலும் 15வது நிதிக்குழு மானியத் திட்டத்தின் கீழ் ரூ.41.35 லட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலையம் கட்டப்பட்டு வருவதை பார்வையிட்டு, பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு வழங்கிட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

அதனைத் தொடர்ந்து அஞ்சூர் ஊராட்சியில் பாரத பிரதமரின் கிராமசாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.200.50 லட்சம் மதிப்பீட்டில் வடிவுள்ளமங்களம் ஏடி காலனி முதல் வள்ளிபுரம் வழி வேப்பங்காட்டுபாறை வரை 0/05/190 கி.மீ. நீளத்திற்கு சாலை மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருவதை பார்வையிட்டு, சாலையின் நீளம், அகலம் ஆகியவற்றினை அளவீடு செய்து ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து, கொந்தளம் ஊராட்சியில் ஊரக குடியிருப்புகள் மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ.2.20 லட்சம் மதிப்பீட்டில் 2 வீடுகள் சீரமைக்கும் பணிகள் மற்றும் அதே பகுதியில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.41.58 லட்சம் மதிப்பீட்டில் கொந்தளம் சாலை முதல் லட்சுமிபுரம் வரை சாலை பலப்படுத்தும் பணி மற்றும் கொடுமுடியில் பொதுப்பணித்துறையின் சார்பில் ரூ.3.73 கோடி மதிப்பீட்டில் பயணியர் மாளிகை கட்டிடம் பலப்படுத்தி மறுசீரமைப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருவதையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைவாகவும், தரமாகவும் முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, கொடுமுடி பேரூராட்சியில் செயல்படும் முழுநேர கிளை நூலகம், மீனாட்சி ஹரன் நூலகம் மற்றும் திறன் மேம்பாட்டு மையம் ஆகியவற்றை பார்வையிட்டு, அங்கு போட்டி தேர்வுக்காக பயின்று வரும் மாணவர்களிடம் தேவைகள் குறித்து கேட்டறிந்தார்.

கொடுமுடி பேரூராட்சி, கணபதிபாளையத்தில் அமைந்துள்ள வள மீட்பு பூங்காவில் குவிந்துள்ள பழைய கழிவுகளை உரத்திற்கு சலித்தது போக மீதமுள்ள கழிவுகள் மற்றும் தினசரி சேகரமாகும் மறுசுழற்சிக்கு பயன்படுத்த இயலாத கழிவுகள் எரிக்கும் இயந்திரம் தனியார் நிறுவனத்தின் மூலம் அமைக்கப்பட்டிருந்ததை நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். மேலும், கொடுமுடி வடக்கு வீதி பகுதியில் உள்ள வீடுகளுக்கு அம்ருத் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் குடிநீரின் அழுத்தத்தினை ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து, சிவகிரி பேருந்து நிலையத்தில் செயல்பட்டு வரும் முதல்வர் மருந்தகத்தினை பார்வையிட்டு, செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின்போது, கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர் காலிதாபானு, மாவட்ட நூலக அலுவலர் யுவராஜ், கொடுமுடி வட்டாட்சியர் பாலமுருகாயி, கொடுமுடி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுமித்ரா, கவிதா, கொடுமுடி பேரூராட்சி செயல் அலுவலர் ரமேஷ்குமார் உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

# பிச்சாவரம் சுற்றுலா தளம் மேம்படுத்தும் பணிகளை அமைச்சர் ஆய்வு



கடலூர், மார்ச் 5-

சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் ரூ.22.72 கோடி மதிப்பீட்டில் சுற்றுலா ஓய்வு இல்லம் மற்றும் சுற்றுலா விளக்க மையக் கட்டடம். பிச்சாவரம் சுற்றுலா தளம் மேம்படுத்தும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சர் சுற்றுலாத்துறையினை மேம்படுத்திடவும், உள்ளூர் பொதுமக்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தி பொருளாதார நிலையினை உயர்த்திடவும் பல்வேறு திட்டங்களை சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் மூலம் செயல்படுத்தி வருகிறார்கள்.

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டத்திற்குட்பட்ட பிச்சாவரம் சதுப்பு நிலக்காடுகள் நிறைந்த பகுதியாக உள்ளது. இந்தியாவில் உள்ள 2 இடங்களில் பிச்சாவரமும் ஒன்றாக உள்ளது. காடுகளை சுற்றி 400 இக்கும் மேற்பட்ட நீர்வழித்தடங்கள் உள்ளதால் தமிழக அரசின் சார்பில் சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் மூலம் சுற்றுலாப் பயணிகள் படகுசவாரி மேற்கொள்ளும் வசதிக்காக 15 மோட்டார் படகுகள் மற்றும் 35 துடுப்பு படகுகள் தற்போது இயக்கப்பட்டு வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் 8,13,080 உள்நாட்டு சுற்றுலா பயணிகளும், 2,230 வெளிநாட்டுப் பயணிகளும் வருகை புரிந்துள்ளனர். சுற்றுலாப் பயணிகளின் கவனத்தினை ஈர்த்திடவும், அதிகமான எண்ணிக்கையில் சுற்றுலாப் பயணிகளை வரவழைக்கும் பொருட்டு கூடுதல் வசதிகள் செய்திடும் வகையில் பூங்கா, திறந்தவெளி முகாம், காட்சி கோபுரம், படகு குழாம், தங்கும் அறைகள் மற்றும் உணவகம் புனரமைக்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் நிர்வாகக் கட்டடம், உணவு அருந்துமிடம், நுழைவுச்சீட்டு கட்டடம், 3 கழிப்பறை கட்டடம், சாலையோரக் கடைகள், தொலைநோக்கு கோபுரம், 4 இடங்களில் பயணிகள் நிழற்குடை, இருக்கையுடன் கூடிய பயணிகள் நிழற்குடை, மேற்கூரையுடன் நடைபாதை, நுழைவுவாயில் பாதுகாவலர் அறை, நினைவுச்சின்ன மேடை, 2 அலங்காரச் சிலைகள், சுற்றுச்சுவர் நீட்டிப்பு, வடிகால் ஏற்பாடுகள், கிரானைட் கற்களால் அமர்வு இருக்கைகள், குழந்தைகள் விளையாட்டுப் பொருட்கள், மரங்கள் மற்றும் புல் தரைகள் ஏற்படுத்துதல், வாகன நிறுத்தம் என ரூ.14.07 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது.

சிதம்பரத்தில் உள்ள புகழ்பெற்ற நடராஜர் கோயிலுக்கு ஏராளமான ஆன்மிக பக்தர்களும், பொதுமக்களும் வந்துசெல்வதால் அவர்களின் தற்போதைய தேவைக்கேற்பவும், எளிதில் பாதுகாப்பான முறையில் வந்து சென்றிடவும், நியாயமான கட்டணத்தில் அனைத்து நவீன அடிப்படை வசதிகளுடன் கூடிய தங்குமிடம் ஏற்படுத்திடும் பொருட்டு சுற்றுலா ஓய்வு இல்லம் மற்றும் சுற்றுலா விளக்க மையக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. இதில் 24 தங்கும் அறைகள், கலையரங்கக்கூடம், உணவருந்தும் கூடம், சுற்றுச்சுவர், வாகனநிறுத்தம் போன்ற பணிகள் ரூ.8.65 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் தெரிவித்தார்.

ஆய்வின்போது சிதம்பரம் சார் ஆட்சியர் கிஷன்குமார், மாவட்ட சுற்றுலாத்துறை அலுவலர் கண்ணன், உதவி இயக்குநர் உமா சங்கர், உதவி செயற்பொறியாளர் ரத்தினவேல், மண்டல மேலாளர் பிரவு தாஸ், வட்டாட்சியர் பிரகாஷ் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# மாபெரும் சிறப்பு மருத்துவ முகாம்



காரைக்கால், மார்ச் 5-

புதுச்சேரி அரசு சுகாதாரம் மற்றும் குடும்ப நலவழித்துறை சார்பில், காரைக்கால் திருநகர் சமுதாய கூடத்தில் நேற்று மாபெரும் சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது. இம்மாமிற்கு புதுச்சேரி குடிமை பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திருமுருகன் தலைமை தாங்கி துவக்கி வைத்தார். மாவட்ட கலெக்டர் சோம சேகர் அப்பாராவ், நல்லவழித்துறை துணை இயக்குனர் டாக்டர் சிவராஜ்குமார் மற்றும் பலர் முன்னிலை வகித்தனர்.

இம்முகாமில், பொது சுகாதார சேவை, வாய், மார்பக மற்றும் கர்ப்பவாய் புற்றுநோய் பரிசோதனை, நீரிழிவு, ரத்த சோகை, இரத்த அழுத்த பரிசோதனை, கண் பரிசோதனை, மலேரியா இரத்த பரிசோதனை, காது, மூக்கு, தொண்டை பரிசோதனை, காசநோய் பரிசோதனை, குழந்தை நல மருத்துவம், மகப்பேறு மருத்துவம் மற்றும் ஆயுஷ் பரிசோதனை மற்றும் ஆலோசனைகள் வழங்கப்படுகிறது. மேலும், முகாமில் உடற்பயிற்சி அளிக்கும் இடம் மற்றும் ஆரோக்கிய உணவு ஸ்டால் ஆகியவற்றையும் அமைச்சர் திருமுருகன் துவக்கி வைத்து கண் பரிசோதனை செய்துகொண்டார்.

தொடர்ந்து, நிகழ்ச்சியில் கலெக்டர் சோமசேகர் அப்பாராவ் பேசியதாவது: இச்சிறப்பு மருத்துவ முகாமை, அனைத்து தரப்பு மக்களும் பங்கேற்று பயன் அடைந்து கொள்ள வேண்டும். இதுபோன்ற முகாம்கள் மூலம் தங்களது உடற் பரிசோதனைகள் மேற்கொள்வது மூலம், தங்களுக்கு உள்ள உடற் சார்ந்த பிரச்சனைகள் முன்னதாகவே தெரிந்துகொள்ளும் வாய்ப்பு கிடைக்கின்றன. தற்பொழுது உள்ள காலகட்டத்தில் எந்த வயதிலும் மாரடைப்பு மற்றும் புற்றுநோய் போன்ற நோய்கள் வரவுள்ளன. அதை தடுப்பதற்கு இங்கே உடற்பயிற்சிகள், ஆரோக்கியமான உணவுகள் பற்றியான ஆலோசனைகள் வழங்கப்படுகிறது. மேலும் 70 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட முதியவர்களுக்கு பிரதம மந்திரியின் முதியோர் ஓய்வூதியம் திட்டம் இங்கு இலவசமாக பதிவு செய்யப்படுகிறது. இதை அனைவரும் பயன்படுத்தி கொள்ள வேண்டுகிறேன். என்றார் முகாமில் 100கும் மேற்பட்ட பொதுமக்கள் மற்றும் முதியவர்கள் ஆர்வமுடன் சென்று பரிசோதனைகளை மேற்கொண்டனர்

நிகழ்ச்சியில் முதன்மை திட்ட மருத்துவர் அதிகாரி தேனாம்பிகை, திருநகர் மருத்துவ அதிகாரி தமிழ்ச்செல்வி, காரைக்கால் அரசு பொது மருத்துவமனை மருத்துவர்கள், செவிலியர்கள், நலவழித்துறை அதிகாரிகள், ஊழியர்கள், டாக்டர் அம்பேத்கர் கல்வி மற்றும் சமுதாய மேம்பாட்டு மைய நிறுவனர் நாகத்தணிகாசலம் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாட்டினை திருநகர் கிராமப்புற பெண் செவிலியர்கள் மெட்டில்டா மேரி, மும்தாஜ் பேகம், சுகாதார உதவி ஆய்வாளர் குமரன், ஆஷா பணியாளர்கள் செல்வி மற்றும் கலையரசி ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

# நாகப்பட்டினம், வேளாங்கண்ணி, வேதாரண்யம் பகுதிகளில் சுற்றுலாத்துறை அமைச்சர் கள ஆய்வு



நாகப்பட்டினம், மார்ச் 5-

தமிழ்நாடு முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாத்தலங்களில் வளர்ச்சிப்பணிகள் மிக சிறப்பாக திட்டமிடப்பட்டு செய்படுத்தப்பட்டு வருகின்றன. நாகப்பட்டினம் மாவட்டத்தில் வேளாங்கண்ணி வெள்ளாற்றில் சுற்றுலாப் பயணிகளின் பொழுதுபோக்கிற்காக படகு சவாரியை அறிமுகப்படுத்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் ஆய்வு செய்து தேர்வு செய்யப்பட்ட இடத்தினை சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, வேளாங்கண்ணிக்கு அருகில் உள்ள பிரதாபராமபுரம் கிராமத்தில் சுற்றுச்சூழல் மற்றும் கிராமிய சுற்றுலாத் திட்டத்தில் உண்டி உறையுள், மிதிவண்டி பாதைகள், கைவினை பட்டறைகள் மற்றும் கலாச்சார நிகழ்வுகள், ஏரி முகப்பு மேம்பாடு மற்றும் படகு சவாரி, பூவை கடற்கரையில் மேம்பாடு மற்றும் திறன் வளர்ப்பு பயிற்சி ஆகியவற்றிற்கு 5.1 கோடி மதிப்பீட்டில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அரசின் பரிசீலினையில் உள்ளது. இத்திட்டத்திற்கான இடங்களை கள ஆய்வு மேற்கொண்டார்.

வேதாரண்யம் வேதபுரீஸ்வரர் கோவிலைச் சுற்றி சிமெண்ட சாலை அமைக்க ரூ.5.44 கோடி மதிப்பீட்டிலும், வேதாமிர்தம் ஏரியில் படகு சவாரிக்கு ரூ.2 கோடி மதிப்பீட்டிலும் வேதாரண்யம் நகராட்சியால் திட்டங்கள் தயாரிக்கப்பட்ட இடங்களையும், புகழ்ப்பெற்ற பறவைகள் சரணாலயமான கோடியக்காட்டில் சாலை மேம்பாடு, காட்சி கோபுரம், தொலை நோக்கி கருவியுடன் கூடிய பார்வையாளர் மாடம் மற்றும் வழிகாட்டி பலகைகள் ஆகிய வசதிகளை ஏற்படுத்த வனத்துறை 5.1 கோடி மதிப்பீட்டில் திட்டம் தயாரித்து வருவதனையும் சுற்றுலாத்துறை அமைச்சர் கள ஆய்வு மேற்கொண்டார். மேலும், நாகப்பட்டினத்தில் அமைந்துள்ள புராதான டச்சு கல்லறைக்கு அருகில் சுற்றுலாப்பயணிகளுக்கு 5.50 லட்சத்தில் அணுகு சாலை, கழிப்பறைகள், வழிகாட்டி பலகைகள் மற்றும் குடிநீர் வசதிகள் ஏற்பாடு செய்வது குறித்தும், நாகப்பட்டினம் பழைய மற்றும் புதிய கடற்கரை பகுதிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் கள ஆய்வு மேற்கொண்டு, நாகப்பட்டினம் நகராட்சி ரூ.80 இலட்சத்தில் பழைய கடற்கரை பகுதியில் சுற்றுலாப் பயணிகள் பொழுதுபோக்கிற்காக பூங்கா அமைக்க திட்டம் தயாரித்து வருவதையும், நாகூர் தர்காவை சுற்றி பேவர்பிளாக் அமைத்தல், இரு சக்கர வாகன நிறுத்துமிடம், யாத்திரிகள் காத்திருப்பு மண்டபம் மற்றும் பேருந்து நிலைய மேம்பாடு போன்றவற்றிக்கு ரூ.4 கோடி மதிப்பீட்டில் நாகப்பட்டினம் நகராட்சி திட்டங்கள் தயாரித்து வருவதனையும் ஆய்வு மேற்கொண்டார். இக்கள் ஆய்வில், நாகப்பட்டினம் மாவட்ட வன அலுவலர் அபிஷேக் தோமர், நாகப்பட்டினம் நகரமன்ற தலைவர் மாரிமுத்து, வேதாரண்யம் நகரமன்ற தலைவர் புகழேந்தி, வேளாங்கண்ணி பேரூராட்சி தலைவர் டாயானா ஷர்மிளா, வேளாங்கண்ணி பேரூராட்சி துணை தலைவர் தாமஸ் ஆல்வா எடிசன், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் திருச்சி மண்டல மேலாளர் பிரபுதாஸ், நாகப்பட்டினம் நகராட்சி ஆணையர் லீனா சைமன் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் திருச்சிராப்பள்ளியின் உதவி செயற்பொறியாளர் ரத்தினவேல், பூம்புகார், சுற்றுலா அலுவலர் கஜேந்திரன், வேதாரண்யம் வட்டார ஆத்மா குழுத்தலைவர் என்.எஸ். சதாசிவம், கல்வி குழு தலைவர் மேகநாதன், ஆத்ம திட்ட மாவட்ட ஆலோசனைகுழு உறுப்பினர் உதயம் வே.முருகையன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# காரைக்காலில் எள் சாகுபடி பயிற்சி முகாம்

கரைக்கால், மார்ச் 5-

காரைக்காலில் தொகுப்பு முதல் நிலை செயல் விளக்கத் திடல் திட்டத்தின் கீழ், நெல்லுக்குப்பின் எள் சாகுபடி பயிற்சி முகாம் நேற்று சிறப்பாக நடைபெற்றது.

காரைக்காலை அடுத்த மாதூர் வேளாண் அறிவியல் நிலையத்தில், தொகுப்பு முதல் நிலை செயல் விளக்கத் திடல் திட்டத்தின் கீழ் நெல்லுக்குப்பின் எள் சாகுபடி பற்றிய பயிற்சி முகாம் நேற்று சிறப்பாக நடத்தப்பட்டது. இப்பயிற்சி முகாமை வேளாண் அறிவியல் நிலையத்தின் முதல்வர் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர். சு. ரவி துவக்கி வைத்து கூறுகையில் காவிரி டெல்டா பகுதியில் நெல் அறுவடைக்கு பின், நெல் தரிசு வயலில் எள் பயிரானது மாசி பட்டத்தில் சாகுபடி செய்யப்படுகிறது. எள் பயிர் வறட்சியை தாங்கி வளரக்கூடியது. இப்பயிரில் 40 முதல் 45 சதவீதம் வரை எண்ணையும், 20 சதவீதம் புரதம் மற்றும் 5 முதல் 6 சதவீதம் வரை நார் சத்து உள்ளது. விவசாயிகள் நெல்லுக்கு பின் தாரளமாக எள் சாகுபடி செய்ய முன்வர வேண்டும். அதற்கு ஏற்ற வேளாண் தொழில்நுட்பம் சார்ந்த பயிற்சிகளை வேளாண் அறிவியல் நிலையம் அளிக்கும் என்றார்.

வேளாண் அறிவியல் நிலையத்தின் தொழில்நுட்ப வல்லுநர் (உழவியல்) முனைவர். வி. அரவிந்த் விதை தேர்வு, விதை நேர்த்தி, விதைப்பு முறை, நீர்ப்பாசனம் மற்றும் களை நிர்வாகம் ஆகியவனை பற்றி விவசாயிகளுக்கு விளக்கமாக கூறினார். தொழில்நுட்ப வல்லுநர் முனைவர். சு. திவ்யா ஒருங்கிணைந்த நோய் மற்றும் பூச்சி மேலாண்மை என்ற தலைப்பில் உரையாற்றினார். இப்பயிற்சியில் விவசாயிகளுக்கு தொகுப்பு முதல் நிலை செயல் விளக்கத் திடல் திட்டத்தின் கீழ் எள் சான்றளிக்கப்பட்ட விதைகள் மற்றும் இதர உயிரி இடுபொருட்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. இப்பயிற்சியில் சுமார் 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்று பயனடைந்தனர்..



# மாற்றுத்திறனாளிகளுக்கு வீடு வழங்கி கனவை நனவாக்கி தந்த முதல்வர்

## கோவை மாவட்ட பயனாளிகள் நெஞ்சார்ந்த நன்றி



கோவை, மார்ச் 5-

தமிழ்நாடு முதலமைச்சர் மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள். மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் சார்பில் இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், பேட்டரி வீல் சேர், மூன்று சக்கர சைக்கிள், மோட்டார் பொருந்திய தையல் இயந்திரம், தேசிய அடையாள அட்டை, மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகை, வங்கி கடன் மானியம், இலவச பேருந்து பயணம், காதொலிக் கருவி, பார்வையற்றோர்களுக்கு உருப்பெருக்கி, அலைப்பேசி மற்றும் கல்வி உதவித்தொகைகள் உள்ளிட்ட பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கோயம்புத்தூர் மாவட்டம், செட்டிபாளையம் பேரூராட்சி, ஓராட்டு குப்பையில் மாற்றுத்திறனாளிகளுக்கு எளிய அணுகுமுறை வசதியுடன் கூடிய 86 குடியிருப்புகள் ஜிடிநாயுடு அறக்கட்டளை பங்களிப்புடன் கட்டப்பட்டுவரும் பணியினை மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மாற்றுத்திறனாளிகளுக்கு நலனை கருத்தில் கொண்டு சிறப்பு திட்டமாக செட்டிபாளையம் பேரூராட்சி, ஓராட்டு குப்பையில், 113 மாற்றுத்திறனாளிகளுக்கு வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டம் 2023-24ன் கீழ் 86 வீடுகள் மாற்றுத்திறனாளிகளுக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. கட்டப்பட்டுவரும் வீடுகளின் பரப்பு 300 சதுர அடியாகும். இத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 86 பயனாளிகளுக்கு வீடு கட்டப்பட்டுள்ளது. இந்த வீடுகளில் ஹால், சமைலறை, படுக்கறை மற்றும் கழிவறைவசதிகள் கட்டப்படவுள்ளது. ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ.2.10 லட்சம் அரசு மானியத்துடன், 5.4.40 லட்சம் தனியார் தொண்டு நிறுவனத்தின் பங்களிப்புடனும் மாற்றுத்திறனாளிகளுக்கு இந்த வீடுகள் கட்டித்தரப்படவுள்ளன.

இந்த இடத்தில் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் வீடு கட்டுவதற்கு ஒவ்வொரு பயனாளியின்



பங்களிப்பு தொகையான ரூ.4.40 லட்சத்தை ஜி.டி.நாயுடு டிரஸ்ட் சார்பாக வழங்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கு ஏற்ற வகையில் இவை கட்டப்பட்டுள்ளது.

இப்பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இத்திட்டத்தின் கீழ் பயனடைந்த ஓராட்டுகுப்பை கிராமத்தை மாற்றுத்திறனாளி பயனாளி இஸ்மாயில் நிறைந்த மனதுடன் தெரிவித்தாவது, ஓராட்டுக்குப்பையில் வசித்து வருகிறேன். 7 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சாலை விபத்தில் என்னுடைய முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்டது. மாற்றுத்திறனாளி ஆன என்னுடைய குறைவான வருமானத்தில் எங்கள் குடும்பம் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ளது. இந்நிலையில் இலவச வீட்டுமனைப் பட்டா வேண்டி மாவட்ட ஆட்சித்தலைவரிடம் மனு அளித்திருந்தோம். அதனடிப்படையில் அரசின் சார்பில் எங்களுக்கு 2சென்ட் வீட்டுமனை பட்டாக்களை அரசு வழங்கியது. தற்போது அந்த எங்களுக்கு அரசின் பங்களிப்பாக ரூ.2.10 லட்சம், ரூ.4.50 லட்சம் ஜி.டி.நாயுடு அறக்கட்டளையின் பங்களிப்புடன் எங்களுக்கு அந்த இடத்தில் வீடுகள் கட்டிதருகின்றார்கள்.

மாற்றுத்திறனாளிகளுக்கு வீடுகள் என்பது மிகவும் அவசியமாகும். மாற்றுத்திறனாளிகளுக்கு சரியான வேலைவாய்ப்பு இருக்காது, வீடு வாடகைகொடுக்க முடியாது. குடும்ப செலவுகளை சமாளிப்பதை பெரிய கஷ்டமாகும்.

மாற்றுத்திறனாளி களுக்கான டவுன்ஷிப் அமையவுள்ள இந்த வீடுகள் இந்தியாவிற்கே முதல் எடுத்துக்காட்டு திட்டமாக அமையும். என்னை போன்ற மாற்றுத்திறனாளி களுக்கு வீடு என்பது கனவாக இருந்தது. இந்த கனவை நனவாக்கி தந்த தமிழ்நாடு முதலமைச்சருக்கும், தமிழ்நாடு அரசுக்கும் நிறைந்த மனதுடன் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

தொகுப்பு:-
**செந்தில் அண்ணா**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
**மோகன்ராஜ்**
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,
கோயம்புத்தூர் மாவட்டம்.









## மீன் அங்காடி திறப்பு




காரைக்கால் லெமேர் பாலம் அருகே ஏராளமான மீனவர்கள் சாலையில் அமர்ந்து மீன் விற்பதை கண்ட தொகுதி எம்எல்ஏ நாஜிம், தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புதிய மீன் அங்காடி கட்டி நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

## காரைக்கால் கீழையூர் பஸ் நிறுத்தம் அருகே பெட்ரோல் பங்க் நுழைவு வாயில் அமைக்க எதிர்ப்பு

### கிராம மக்கள் கலெக்டரிடம் புகார்

காரைக்கால், மார்ச் 5-

காரைக்காலில் கீழையூர் கிராம பஸ் நிறுத்தம் அருகே, பெட்ரோல் பங்க் நுழைவு வாயிலை அமைக்க கடும் கண்டனம் தெரிவித்து கிராம மக்கள் கலெக்டரிடம் புகார் மனு அளித்தனர்.

காரைக்காலை அடுத்த திருபட்டினம் கீழவாஞ்சூர் கிராம மக்கள் நேற்று மாவட்ட கலெக்டர் சோமசேகர் அப்பாராவிடம் வழங்கிய புகார் மனுவில் கூறியிருப்பதாவது: காரைக்கால் மாவட்டம் திரு.பட்டினம் கொம்யூன் பஞ்சாயத்திற்கு உட்பட்ட கீழவாஞ்சூர் கிராமத்தில், பஸ் நிறுத்தம் அருகில், கடந்த 27 மாதங்களாக பூட்டி வைக்கப்பட்ட குபேரன் பியூல் (இந்தியன் ஆயில்) பெட்ரோல் பங்க் தற்சமயம் மீண்டும் திறப்பதற்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதற்கு முன்பாக அந்த பெட்ரோல் பங்கின் நுழைவு வாயில், தேசிய நெடுஞ்சாலை பக்கமாக இருந்தது. அந்த சமயத்திலேயே பல்வேறு விபத்துக்கள் 10 க்கும் மேற்பட்ட உயிரிழப்புகள் அங்கு நிகழ்ந்துள்ளன. அதில் எங்கள் கிராமத்தைச் சேர்ந்த கருணாகரன், ஜெயகாந்தன் மற்றும் ஆனந்தி ஜெயகாந்தன் ஆகிய மூவரும் அதே பெட்ரோல் பங்க் நுழைவு வாயிலில் ஏற்பட்ட விபத்தின் காரணமாக உயிரிழந்தவர்கள். இப்படி இருக்கும் பட்சத்தில் தற்சமயம் பெட்ரோல் பங்கின் நுழைவாயில் எங்கள் கிராமப்புற பிரதான சாலையில் அமைய இருப்பதால் இன்னும் பல உயிரிழப்புகள் ஏற்படுவதோடு, கிராம மக்கள் பல இன்னல்களையும் சந்திக்க நேரிடும். ஏற்கனவே இந்த பெட்ரோல் பங்க் அமைந்த காரணத்தினால் பல்வேறு பிரச்சனைகளை நாங்கள் சந்தித்து வருகிறோம். உதாரணமாக அங்கு அமைக்கப்பட்டிருந்த பஸ் நிழற்குடை முற்றிலும் அகற்றப்பட்டு இப்போது பொதுமக்கள் கடுமையான வெயிலில் காத்திருந்து பஸ் ஏறும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அது மட்டும் இன்றி எங்கள் கிராமத்தின் மேட்டுப்பாசன வடிகால் கிணறு முழுவதுமாக மூடப்பட்டு தற்சமயம் வடிகால் வசதி இழந்து தவித்துக் கொண்டிருக்கின்றோம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் கிராம மக்களின் மனநிலை மிகவும் கவலையாக உள்ளது. எனவே தாங்கள் எங்கள் கிராமத்தின் பொது நலன் கருதி, இந்த பெட்ரோல் பங்க் இன் நுழைவு வாயிலை எங்கள் கிராமத்தின் பிரதான சாலையில் அமைப்பதற்கு உரிமை வழங்க வேண்டாம். மீறி வழங்கும் பட்சத்தில் கிராம மக்கள் போராட்டத்திற்கு தள்ளப்படுவார்கள். இவ்வாறு அந்த புகார் மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்




கோவை, மார்ச் 5-

கோயம்புத்தூர் மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகரன் முன்னிலையில் மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மேயர் மற்றும் மாநகராட்சி ஆணையாளர் ஆகியோர்களிடம் மாநகராட்சியின் அனைத்து பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் 38 கோரிக்கை மனுக்களை அளித்தனர். இதில் பொதுமக்கள் பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள், சாலை வசதி, மின்விளக்குகள், குடிநீர் வசதி, பாதாள சாக்கடை, தொழில்வரி, சொத்துவரி, காலியிடவரி, புதிய குடிநீர் இணைப்பு, பெயர் மாற்றம், மருத்துவம், சுகாதாரம், கல்வி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்த பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்கள் பெறப்பட்டன. இவற்றில் கிழக்கு மண்டலத்தில் 7 மனுக்களும், மேற்கு மண்டலத்தில் 8 மனுக்களும், வடக்கு மண்டலத்தில் 3 மனுக்களும், தெற்கு மண்டலத்தில் 5 மனுக்களும், மத்திய மண்டலத்தில் 10 மனுக்களும், பிரதான அலுவலகத்தில் 5 மனுக்களும் ஆகமொத்தம் 38 மனுக்களை பொதுமக்கள் அளித்தனர். இக்கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்ட மேயர், இம்மனுக்களின் மீது உடனடியாக தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட மண்டல உதவி ஆணையாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

இக்கூட்டத்தில், மதிப்பிற்குரிய துணை மேயர் வெற்றிசெல்வன், துணை ஆணையாளர்கள் சுல்தானா, குமரேசன், உதவி நகர்நல அலுவலர் பூபதி, உதவி ஆணையர்கள் முத்துசாமி (கிழக்கு), துரைமுருகன் (மேற்கு), குமரன் (தெற்கு), செந்தில்குமரன் (மத்தியம்), மோகனசுந்தரி (நிர்வாகம்), மாநகர கல்வி அலுவலர் குணசேகரன், நகரமைப்பு அலுவலர் குமார், செயற்பொறியாளர்கள், உதவிசெயற்பொறியாளர்கள், மண்டல சுகாதார அலுவலர்கள், பொறியாளர்கள், சுகாதார ஆய்வாளர்கள், மாநகராட்சி அனைத்து அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டார்கள்.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com, Website: www.maalaiexpress.com Ph : 0413-2226989, 9842335007



# தொகுதி மறுசீரமைப்பால் தமிழ்நாடு 8 மக்களவை இடங்களை இழக்கும்-ஸ்டாலின்

# சாம்பல் புதன் வழிபாடுடன் கிறிஸ்தவர்கள் தவக்காலம் தொடங்கியது



# பலூனை விழுங்கிய 7 மாத குழந்தை மூச்சுத்திணறி சாவு


# மாலை எக்ஸ்பிரஸ்

Email: maalaiexpresspdy@gmail.com

Website: www.maalaiexpress.com

• 5-3-2025 புதன்கிழமை •பக்கம் 8 • ரூ.600 காசுகள்